S. Nadarajah Publisher

விலை சதம் 5

பக்கங்கள் 4

"சுதந்திரன்"
விளம்பர விபரங்கள்
சுதந்திரனில் ஒப்பந்தத்தின் பேரில் விளம்பரம் செய்ய விரும்புகிறவர்களும், அவசரகால அறிவித்தல்களுக்கு விரும்புகிறவர்களும் எழுதுங்கள்.
மானேஜர்,
"சுதந்திரன்"
194 A தட்டாரத் தெரு, கொழும்பு.

சுதந்திரன்
THE "SUTANTIRAN."

(A TAMIL DAILY OF THE TAMIL SPEAKING PEOPLE)
REGISTERED AS A NEWSPAPER AT THE G. P. O.

இலங்கையினதும் இலங்கைவாழ் தமிழ்ப் பேசும் மக்களதும்
சுதந்திரத்திற்காக வெளிவருவது.

"சுதந்திரன்"
(நிலப் பதிப்பு)
சந்தா விபரம்
தனிப் பிரதி சதம் 5
3 மாதச் சந்தா ரூ. 6-00
6 மாதச் சந்தா „ 12-00
1 வருடச் சந்தா „ 24-00
மானேஜர்,
"சுதந்திரன்"
194 A, தட்டாரத் தெரு, கொழும்பு.

Telegrams: 'SUTANTIRAN' COLOMBO

Phone. 3411

ஒற்றுமைப்பட்டால் உண்டு வாழ்வு

நாமார்க்கும் குடியல்லோம்

புத்தகம் | கொழும்பு சர்வஜித் வரு கார்த்திகை 7௳ சனிக்கிழமை | Colombo November, 22 1947 | ஹிஜ்ரி 1367 முஹர்ரம் பிறை 8 | இதழ் 172

சாம்ராஜ்யப் பாதுகாப்புக்கு இலங்கைதான் முதலாவது பலிகடா!

காமன்ஸ் சபையில் இலங்கை சுதந்திர மசோதா இரண்டாவதுதடவை வாசிக்கப்பட்டு நிறைவேறியது

"சிறுபான்மை தமிழரிடம் சிங்களவர் நியாயமான முறையில் நடந்துகொள்ள வேண்டும்"

லண்டன், நவ 2

இன்று காமன்ஸ் சபையில் இலங்கை சுதந்திர மசோதா இரண்டாவது தடவையாக வாசிக்கப்பட்டு நிறைவேறியது. எல்லாகட்சியினரும் மசோதாவை ஆதரித்தனர்.

எதிர்க்கட்சி சார்பாகப் பேசிய கேப்டன் காம்மன்ஸ் இலங்கையிலுள்ள சிங்களவர்கள் சிறுபான்மையோரான தமிழர்கள் விஷயத்தில் மிகவும் நியாயமான முறையில் நடந்துகொள்ள வேண்டுமென்றும் நிர்வாகத்தில் மட்டுமல்ல, அதிகாரத்திலும் பொறுப்பிலும் தமிழர்களுக்குப் போதிய பங்கு அளிக்க வேண்டுமென்றும், இலங்கையில் கம்யூனிசத்தால் அபத்து ஏற்படக்கூடிய நிலைமை இருந்து வருகிறதென்றும் தெரிவித்தார்.

பாதுகாப்பு ஒப்பந்த சம்பந்தமாக ஏற்பட்ட சந்தேக வினாக்களுக்கு குடியேற்றநாட்டு உதவி மந்திரி பதிலளித்தபோது, யுத்தம் ஏற்பட்டால் சாம்ராஜ்யத்தைப் பாதுகாக்க வகுக்கும் திட்டத்தில் இலங்கைதான் முதல் ஸ்தானம் வகிக்குமென்று தெரிவித்தார்.

லண்டன், நவ. 21

இன்று காமன்ஸ் சபையில் இலங்கை சுதந்திர மசோதா இரண்டாவது தடவையாக வாசிக்கப்பட்டது. அம்மசோதாவின்படி சுதந்திர நாட்டைப் போல இலங்கைக்கு பிரிட்டிஷ் சர்க்கார் பிரிட்டிஷ்சாம்ராஜ்யத்திற்குட்பட்ட பூரண பொறுப்பாட்சி வழங்குவதை எல்லா அரசியல் கட்சியினரும் ஏகமனதாக வரவேற்றார்கள்.

பிரிட்டிஷ் குடியேற்றநாட்டு மந்திரி இலங்கை சுதந்திர மசோதாவை இரண்டாவது தடவையாகப் பிரரேபித்துப் பேசியபோது பின்வருமாறு தெரிவித்தார்:—

இந்த மசோதாவில் சிலபகுதிகளில் வெஸ்ட்மினிஸ்டர் சட்டத்திலுள்ள விதிகள் அப்படியே அமைக்கப்பட்டிருக்கின்றன. எதிர்காலத்தில் பிரிட்டிஷ் பாராளுமன்றங்களின் சட்டங்கள் இலங்கையைக் கட்டுப்படுத்தாதிருக்கும் பொருட்டும், இப்பொழுது ஓரளவரையறைக்குள் கட்டுப்பட்டிருக்கும் இலங்கையின் சட்டமியற்றும் அதிகாரத்தை அக்கட்டுப்பாட்டினின்றும் விலக்கும் பொருட்டுமே இவ்விதம் வெஸ்ட்மினிஸ்டர் சட்ட விதிகள் அப்படியே மசோதாவில் சில பகுதிகளில் அமைக்கப்பட்டுள்ளன. இலங்கைக்கு அரசியல் சம்பந்தமாகவும் பொருளாதார சம்பந்தமாகவும் கஷ்டங்களிருக்கின்றன, அவைகளை சுலபமாகத் தீர்க்க முடியாது. ஆனால் இலங்கை தன்னம்பிக்கையுடையதாகவும் எதிர்காலத்தில் நம்பிக்கையுடையதாகவுமிருக்கிறது இலங்கை பிரிட்டனுக்கும் பிரிட்டிஷ் சாம்ராஜ்யத்திற்கும் விசுவாசமாக இருந்து சுதந்திர நாடுகள் அடைந்துள்ள லட்சியங்களையும் நோக்கங்களையுமடைய அது நிச்சயித்திருக்கிறது: பல்வேறு தொல்லைகளுக்குட்பட்டிருக்கும் இந்த உலகில் இலங்கை ஒரு பெரிய ஜனநாயக நாடு என்பதை அது உலகுக்கு நிரூபித்துக் காட்டுமென நான் நம்புகிறேன்.

மசோதாவை எதிர்க்கட்சி சார்பாக ஆதரித்துப் பேசிய கன்ஸர்வேடிவ் அங்கத்தினர் கேப்டன் லியோனர்ட் காமன்ஸ் பின்வருமாறு தெரிவித்தார்:—பிரிட்டிஷ் சாம்ராஜ்ய பரிணமித்து வளரும் ஓர் முக்கியமான கட்டத்தில் எல்லாக் கட்சிகளும் ஒன்றுசேர்ந்து இலங்கை சுதந்திர மசோதாவை ஆதரிக்கின்றன இது ஓர் அபூர்வ சந்தர்ப்பமாகும். இனிமேல் இலங்கை விசுவாசத்திலும் அன்பிலும் பிரகாசத்திலும் தன் சொந்த நலத்தை முன்னிட்டுமே பிரிட்டனுக்குக் கட்டுப்பட்டிருக்கும். இலங்கைக்கு அளிக்கப்படும் இந்த சுதந்திரத்தில் பிரிட்டனின் சூத்திரக்கயிறு எதுவுமில்லை.

இலங்கை தனது அரசியல் திட்டத்தை திருத்தியமைத்துக் கொள்ள அதற்கு இனி உரிமையுண்டு. இந்த உரிமை கானடாவுக்குக் கூட கிடையாது. பாதுகாப்பு ஒப்பந்தத்தையும் வெளிநாட்டு விவகார சம்பந்தமான ஒப்பந்தத்தையும் இலங்கை எந்த சமயத்திலும் ரத்து செய்துகொள்ள முடியும். இலங்கைக்கு பூரண சுதந்திரம் அளிக்கப்பட்டிருக்கிறது. அது தனது விருப்பத்தின்படி சாம்ராஜ்யத்திலிருந்து விலகிக்கொள்ளவும் முடியும்.

சிங்களவருக்கு உபதேசம்

சிறுபான்மையோரான தமிழ் மக்களிடத்து சிங்களவர்கள் நியாயமான முறையில் நடந்துகொள்ள வேண்டும். அதற்கும் மேற்படவே நடந்து கொள்ள வேண்டும். நிர்வாகத்தில் மட்டுமல்ல, அதிகாரத்திலும் பொறுப்பிலும் தமிழர்சமூகத்திற்குப் போதியபங்கு அளிக்கவேண்டும். அவர்கள் நிரந்தரமாகவே அரசியல் சிறுபான்மையோராக இருக்கக்கூடிய நிலைக்கு அவர்கள் கொண்டுவந்துவிடலாகாது. தமிழர்களும் நியாயமான உரிமைகளைத் தவிர மிதமிஞ்சிய உரிமைகளைக் கோரலாகாது.

கம்யூனிசம்

இலங்கைக்கு கம்யூனிசத்தால் ஆபத்து ஏற்படக்கூடிய

(4-ம் பக்கம் பார்க்க)

ஆசிரியர் ரூ. 5000 நஷ்டஈடுகோரும் வழக்கு

பாடசாலை மானேஜர் மீது தாக்கல்

யாழ்ப்பாணம், நவ 21

கோப்பாய் தெற்கைச் சேர்ந்த ஒரு ஆசிரியர் யாழ்ப்பாண பகுதி இலங்கை திருச்சபை பாடசாலைகள் மானேஜர் மீது ரூபாய் 5000 நஷ்டஈடு கோரி ஓர் வழக்கை யாழ்ப்பாண டிஸ்டிரிக்ட் கோர்ட்டில் தாக்கல் செய்துள்ளார் திரு எஸ். கே. அருணாசலம் என்னும் ஆசிரியர் சங். ஜே. ஏ. ஆர். நவரத்னம் என்பவர்மீது இந்நஷ்டஈட்டு வழக்கை அடிஷனல் டிஸ்டிரிக்ட் நீதிபதி முன் தாக்கல் செய்தார்.

இந்நஷ்டஈட்டு வழக்கில் மனுதார், தாம் 1945-ம் வருடம் ஜனுவரி மாதம் இலங்கை திருச்சபை பாடசாலைகளின் வடபகுதி மானேஜராக இருந்த திரு எல். சுப்பிரமணியம் தமைனல்லூரிலுள்ள கைக்குள தமிழ்க் கலவன் பாடசாலைக்கு தலைமை ஆசிரியராக நியமித்திருந்ததாகவும் 1947 மார்ச்சு 22-ம் தேதிவரையும் அப்பதவியில் இருந்ததாகவும் எதிராளி திரு சுப்பிரமணியத்திற்குப் பின் நியமிக்கப்பட்டவரென்றும் 1947 மார்ச்சு 22-ம் தேதி எவ்விதக் காரணமுமில்லாது தமக்குப் போதிய அறிவித்தல் கொடாது வேண்டுமென்று தம்மை தமது பதவியிலிருந்து விலக்கியதாகவும் யாழ்ப்பாண மாஜிஸ்டிரேட் கோர்ட்டில் நெ. 5547 வழக்கின்படி எதிராளி தமக்கு நஷ்டஈடு கொடுக்க ஒப்புக்கொண்டதாகவும் அதன்மேல் தமக்கு ஏற்பட்ட நஷ்டஈடு ரூபாய் 5000 எதிராளி கொடுக்கவேண்டுமென்றும் கூறியிருந்தார்.

எதிராளி இதற்குப் பதில் தாக்கல் செய்தபோது 1942-ம் வருடத்தில் இலங்கை திருச்சபை பாடசாலைகள் வடபகுதி மானேஜரால் இவர் உதவ ஆசிரியராக எடுக்கப்பட்டிருந்தாரென்றும் 17-1-45 முதல 30-10-45 வரை தற்காலிக தலைமை ஆசிரியராக இருந்தாரென்றும் மனுதாரி தொடர்ந்து 30-1-47 வரையும் இப்பதவியில் இருந்தாரென்றும் தாம் திரு எல் சுப்பிரமணியத்திற்குப் பின் மானேஜர் பதவியை ஏற்றுக்கொண்டதாகவும் மனுதாரி வேறு பாடசாலைகளில் தற்காலிக தலைமை ஆசிரியர் பதவியை ஏற்க மறுத்துவிட்டாரென்றும் அவரைப் பழையபடி உதவி ஆசிரியராக இருக்கும்படி கூறியதற்கும் மறுத்துவிட்டதோடு பாடசாலை தலைமை ஆசிரியரிடம் தஸ்தாவேஜுகளையும் மற்றும் பொருள்களையும் ஒப்படைக்கத் தவறியதாகவும் இதனால் 6-3-47 ல் அவரை சேவையிலிருந்து நிறுத்தியதாகவும் மாஜிஸ்டிரேட் கோர்ட்டில் வழக்கு தாக்கல் செய்யப்பட்டதாகவும் தெரிவித்துள்ளார்.

மேலும் மனுதாரி தொடர்ந்து அவரது தற்காலிக தலைமை ஆசிரியர் பதவியில் இருக்கவிடப்பட்டதாகவும் தகுந்த தராதரமில்லாதவர்களை தலைமை ஆசிரியர் பதவிக்கு நியமிக்க கல்வி இலாகா அனுமதிக்காதென்றும், மானேஜரின் கட்டளைப்படி நடவாது சட்டவிரோதமாக 22-3-47 வரையும் தலைமை ஆசிரியர் பதவியை வகித்ததாகவும், தலைமை ஆசிரியரிடம் தஸ்தாவேஜுகள் முதலியவற்றை ஒப்படைக்கத் தவறியதாகவும் இவை காரணமாக வேலையிலிருந்து நீக்கியதாகவும் தமது பதிலை தெரிவித்துள்ளார். எதிராளி மனுதாருக்கு பின்னர் கொடுக்க வந்த வேலைகளையும் அவர் மறுத்துவிட்டதாகவும் தெரிவிக்கப்பட்டது நீதிபதி இவ் வழக்கை 1948 மார்ச்சு 30-ம் தேதிக்கு ஒத்திவைத்தார்.

இந்திய ரயில்வே வரவு செலவு

புதிய கட்டணங்கள்

புதுடில்லி, நவ 20

இந்திய யூனியனின் முதலாவது ரயில்வே வரவு செலவுத் திட்டம் வெளியிடப்பட்டுள்ளது. அதன்படி இந்தியாவிலுள்ள எல்லா அரசாங்க ரயில்வேக்களிலும் ஒரே விதமான கட்டணங்கள் விதிக்கப்படும். முதல் வகுப்பு பிரயாணத்திற்கு மைலுக்கு 30 தம்பிடி வீதமும் இரண்டாவது வகுப்புக்கு 16 தம்பிடி வீதமும் இண்டர் வகுப்புக்கு 9 தம்பிடி வீதமும் மெயில வண்டி மூன்றாவது வகுப்புக்கு 5 தம்பிடி வீதமும் சாதாரண வண்டி மூன்றாவது வகுப்புக்கு 4 தம்பிடி வீதமும் கட்டணங்கள் விதிக்கப்படும். 1948 ஜனுவரி முதல் இப்புதிய கட்டணங்கள் அமுலுக்கு வரும்.

இந்தியா சுதந்திரமடைந்த ஆகஸ்ட் 15-ம் தேதி முதல் பண வருட முடிவான 1948 மார்ச் 31-ம் தேதி வரை ஏழரை மாதங்களுக்கு இந்த வரவு செலவுத் திட்டம் தயாரிக்கப்பட்டிருக்கிறது. அதன்படி உத்தேச வரவு 107 கோடி ரூபாய் உத்தேச செலவு வட்டிச் செலவு உட்பட 120 கோடி 62 லட்ச ரூபாய் சில்லறை வரவு 124 லட்ச ரூபாயையும் கட்டண உயர்வால் கிடைக்கும் வருமானம் 919 லட்சம் ரூபாயையும் சேர்த்தால் வரவு செலவுத் திட்டத்தில் 13 கோடி 19 லட்சம் ரூபாய் துண்டு விழுகிறது.

ரயில்வே தொழிலாளர் சம்பள உயர்வால் செலவினத்தில் 22 கோடி 50 லட்ச ரூபாய் அதிகச் செலவு ஏற்படுகிறது.

(அ-பிரஸ்)

காஷ்மீர் நிலைமை

ஸ்ரீநகர், நவ 19

கொள்ளையடிப்பவர்களுக்கும் பெண்களை அபகரித்துச் செல்பவர்களுக்கும் மரண தண்டனை விதிக்க காஷ்மீர் சர்க்கார் அவசரச் சட்டம் பிறப்பித்திருக்கிறார்கள். கலகம் செய்யத் தூண்டும் அதிகாரிகள்மீது கடுமையான நடவடிக்கை எடுக்கவும் ஒரு அவசரச்சட்டம் பிறப்பிக்கப்பட்டிருக்கிறது!

எதிரிகளால் சூழப்பட்ட ஜாஸகார் ராணுவ ஸ்தலத்தை எதிரிகளிடமிருந்து இந்திய துருப்புகள் மீட்டன. ரஸ்தா தடைகளை நீக்கி இந்திய துருப்புகள் முன்னேறுகின்றன.

(அ-பிரஸ்)

1948ல் இலங்கைக்கு அதிக அரிசி

கொழும்பு, நவ 21

இலங்கைக்கு 1948ம் வருட முதற் பகுதிக்கு 185,000 டன் அரிசி கிடைக்குமென்றும் இந்த அரிசியில் 150,000 டன் அரிசியை பர்மாவே இலங்கைக்கு கொடுக்கும் என்றும் உணவு இலாகா கமிஷனர் திரு கே. ஆழ்வாப்பிள்ளை தெரிவிக்கின்றார். 1947ம் வருடத்துக்கு இலங்கைக்கு மொத்தமாக 276,000 டன் அரிசிதான் ஒதுக்கப்பட்டிருந்தது அடுத்த வருடத்துக்கு முதற்பகுதிக்கு அதிகமாக அரிசி கிடைப்பதாக கூறப்படுகிறது.

உணவுப் பெட்டிகளை உடைத்த கொள்ளைக்கோஷ்டி

ரயிலில் திருட முயற்சி

கொழும்பு நவ 21

கொழும்பு-காங்கேசன்துறை இரவு மெயிலில் உணவுப் பொருள்கள் இருந்த பெட்டிகளை உடைத்து பொருள்களைக் களவாட நான்கு பேர் முயற்சித்ததாகவும் பாதுகாப்பு அதிகாரிகள் அவர்களைத் தடுத்து பிடிக்க முயன்றதாகவும் அவர்கள் இவர்களது பிடியினின்று தப்பி ரயிலுடன் வந்துகொண்டிருந்த காரில் குதித்துத் தப்பிச் சென்றுவிட்டனரென்றும் கூறப்படுகிறது.

ரயில் வண்டியில் சேதம் விளைத்தார்

சித்தப்பிரமை பரிசோதனை இடத்துக்கு அனுப்பப்பட்டார்

கொழும்பு, நவ. 21

புதன்கிழமை கோட்டையிலிருந்து பிறபகல் 2-25 மணிக்குப் புறப்பட்ட கரையோரப் பாதை ரயிலில் முதல் வகுப்பு வண்டியில பிரயாணம் செய்த ஒரு பிரயாணி ரயில் வண்டியின் சாளரங்களை உடைத்தும் இருக்கைகளில் உள்ள மெத்தைகளைக் கிழித்தும் அதில் பிரயாணம செய்த பாடசாலைச் சிறுமிகளைப் பயமுறுத்தியும் வந்தாரென்றும் சத்தம் கேட்டு ஒரு பாதுகாப்பு அதிகாரி அப்பெட்டிக்குச் சென்றபோது அந்த நபர் அவரைத் தாக்கினாரென்றும் தெஹிவளையில் அவரைக் கைதுசெய்து சித்தப்பிரமை பிடித்தவர்களை வைத்துப் பரிசோதிக்கும் இடத்துக்கு அனுப்பப்பட்டாரென்றும் கூறப்படுகிறது. ரயில் பெட்டியில சுமார் ரூ. 400 மதிப்புக்கு சேதமேற்பட்டுள்ளதாகக் கூறப்படுகிறது.

ஹைதராபாத் சமஸ்தான சீர்திருத்தம்

சமஸ்தான காங்கிரஸ தலைவர் கருத்தறிய ஆவல்

ஹைதராபாத், நவ 19

ஹைதராபாத் சமஸ்தானத்திற்கு மேலும் அரசியல் சீர்திருத்தம் வழங்க நிஜாம் மன்னர் உத்தேசித்திருக்கிறார் இது சம்பந்தமாக சர்க்கார் பிரதிநிதி சிறையிலுள்ள காங்கிரஸ் தலைவர் சுவாமி ராமானந்த தீர்த்தாவைச் சந்தித்துப் பேசினார் தனது சகாக்கள் எல்லாம் சிறையிலிருப்பதால் அவர்களைக் கலந்து பேசாமல் தனது அபிப்பிராயத்தைத் தெரிவிக்க முடியாதென திரு ராமானந்த தீர்த்தா தெரிவித்துவிட்டார்

புதிய முத்திரைகள் விற்பனை

தபாற் கந்தோர் அதிகாரிகளின் விசேஷ ஒழுங்குகள்

கொழும்பு, நவ. 21

புதிய அரசியல் திட்டத்தின் அங்குரார்ப்பணத்தைக் குறித்தும் தபால் முத்திரைகள் 25-ம் தேதி முதல் விற்பனைக்கு வருகின்றன. தபாற் கந்தோர் அதிகாரிகள் விசேட ஒழுங்குகள் செய்துள்ளனர். இந்த விசேட முத்திரைகள் 1948ம் வருடம் ஜூன் 30-ம் தேதிவரையும் விற்பனைக்கு இருக்குமென்று கூறப்படுகிறது.

விலைக் கட்டுப்பாடு தளர்த்தப்படுகிறது

அநேக பொருள்கள் கட்டுப்பாட்டு ஜாபிதாவிலிருந்து நீக்கப்பட்டன

கொழும்பு, நவ. 2

இப்பொழுது பல பொருள்களின் மீதுள்ள விலைக் கட்டுப்பாடுகள் நீக்கப்பட்டுவிட்டன இது இப்பொழுது நிலைமை அபிவிருத்தியடைந்து வருவதைக் குறிக்கிறது என ஓர் அதிகாரி கருதுகின்றார். பல உணவுப் பொருள்கள், மற்றும் பொருள்கள், கால் நடைத் தீவனங்கள் முதலியனவற்றின் விலைக் கட்டுப்பாடுகள் நீக்கப்பட்டுள்ளன.

பிரதம குமாஸ்தாவுக்கு ரூ. 500 பிணை

ஜவுளிக் கூப்பன் மோசடி செய்ததாக வழக்கு

கொழும்பு, நவ. 21

ஜவுளி இலாகாவில் ஜவுளி கூப்பன்கள சம்பந்தமாக மோசடி செய்ததாக ஜவுளிக் கட்டுப்பாட்டிலாகா பிரதம குமாஸ்தா திரு டி பி ஏ பெர்னாண்டோ என்பவர் மீது 2-ம் குறுக்குத்தெருவை சேர்ந்த ரி. ஏ. மன்சூர் மீதும் குற்றஞ்சாட்டித் தொடரப்பட்ட வழக்கில் மன்சூர் ரூ. 500 பிணையில் விடப்பட்டிருந்தார். இப்பொழுது கொழும்பு தற்காலிக அடிஷனல் மாஜிஸ்டிரேட் திரு. ஈ. பி வீரக்கூன்முன் விசாரணைக்கு இவ் வழக்கு எடுக்கப்பட்டது இதில் பிரதம குமாஸ்தா திரு பெர்னாண்டோவும் ரூ 500 பிணையில் போகுமாறு நீதிபதி தீர்ப்பளித்தார். டிஸம்பர் 2-ம் தேதி இவ் வழக்கு விசாரணைக்கு எடுக்கப்படும்.

ரூ. 3185 மதிப்புள்ள சொத்துக்கள் களவு

கொழும்பு, நவ. 21

மொரட்டுவை ரயில்வே ஸ்டேஷன் குமாஸ்தாக்களில் ஒருவரான திரு டி. டப்ளியூ பொன்னசாமி என்பவருடைய வீட்டில் திருடர் புதன்கிழமை இரவு புகுந்து ரூ. 3185 மதிப்புள்ள ரொக்கம், ஜவுளிவகை நகைகள் முதலியவற்றைத் திருடிவிட்டதாக அறிவிக்கப்படுகிறது.

மரத்தில் மோட்டார் சைக்கிள் மோதுண்டது

ராகமை, நவ. 21

நீர்கொழும்பைச் சேர்ந்த ரூ. கிங்ஸ்லி அபேசிங்கா என்பவர் ராகமையில் மதுமகலா என்னுமிடத்தில் தமது மோட்டார் சைக்கிளில் வருகையில் மரத்துடன் மோதியதால் மயக்கமடைந்தார். ஸ்தல ஆஸ்பத்திரிக்கு எடுத்துச் செல்லப்பட்டு அங்கு அவர் குணமடைந்துள்ளதாக கூறப்படுகிறது.

பல்கேரியாவின் கம்யூனிஸ்டு பிரதமர்

ஸோபியா திரும்பினார்

ஸோபியா, நவ. 20

பல்கேரியாவின் கம்யூனிஸ்டு பிரதமர் டிமிட்ரோவ் நீண்டகால ஓய்வின பின் ஸோபியா திரும்பி விட்டார். பிரதமர் கடமைகளை ஏற்றுக் கொண்டு விட்டார். (ராய்ட்டர்)

வெளிநாட்டிலுள்ள இந்திய மாணவர்

பணம் கடன்கொடுத்துதவ இந்திய சர்க்கார் தீர்மானம்

பாகிஸ்தான் பிரதேசத்திலிருந்து சமீபகால நெருக்கடிகளினால் அகதிகளாக இந்திய யூனியன் பகுதிக்குள் வந்த முஸ்லிமகளல்லாதாருடைய மக்கள் வெளியிடங்களில் கல்வி கற்கின் அவர்களுக்கு நிதி கடன் கொடுத்துதவ இந்திய அரசாங்கம் முன்வந்துள்ளது, பணமில்லாது கல்வி கற்க வசதியில்லாது இருக்கும் இத்தகைய இந்திய மாணவர்கள் தாமதியாது கோட்டையிலுள்ள இந்திய வர்த்தக கமிஷனருக்கு விண்ணப்பிக்கும்படி தெரிவிக்கப்பட்டுள்ளனர்.

பாலஸதீன கமிட்டி

நியூயார்க், நவ. 20

பாலஸதீன் பிரிவினைத் திட்டம் ஐக்கியதேச பாலஸதீன கமிட்டியில் பாலஸதீன உபகமிட்டியால் சமர்ப்பிக்கப்பட்டபோது அதைக் குறித்து ஈராக், லெபானன், பாகிஸ்தான் முதலிய நாடுகளின் பிரதிநிதிகள் சரமாரியான கேள்விகள் கேட்டார்கள் கேள்விகளை எழுதிக் கொடுத்தால் அவைகளைப் பரிசீலனை செய்து பின்னர் பதில் கூறுவதாக சப் கமிட்டி அங்கத்தினர்கள் தெரிவித்தார்கள் ஐக்கிய தேச சபை நியமிக்கும் கமிஷனுக்கு பாலஸதீனத்தை நிர்வகிக்க அதிகாரம் கிடையாதென்று லெபானன் பிரதிநிதி தெரிவித்தார். பிரிவினையால் ஏற்படும் அபாயத்தை ஈராக் பிரதிநிதி சுட்டிக்காட்டினார்.

(ராய்ட்டர்)

புதிய கார் களவு

கொழும்பு, நவ 21

அனுராதபுரத்தில் இருக்கும் விவசாய இலாகா அதிகாரி திரு பி. டி. ஜினேந்திரதாஸா என்பவருக்குச் சொந்தமான ஒரு புதிய ஆஸ்டின் கார் அவரது வாசஸ்தலத்திலிருந்து காணாமற்போய்விட்டதாக அறிவிக்கப்படுகிறது. இக்காரின் விலை ரூ 6750 என்றும் கூறப்படுகிறது. இன்னும் இதனைக் கண்டுபிடிக்கவில்லை.

உங்கள் மனச்சாட்சியே இதற்கு நற்சாட்சியாகும்
1948-ம் வருடத்து மங்களகரமான
மெய்கண்டான்
திருக்குறட் கலண்டர்

இங்கிலீஷ்-தமிழ்-அறபு தேதிகள், திதி-நக்ஷத்திரம்-யோகம், விரத-விசேஷங்கள், அரசாங்க-வங்கி விடுமுறை நாட்கள், அமாவாசை, பூரணை, கார்த்திகை, அட்டமி, அரசாங்க விடுமுறை ஆகிய நாட்களைத் துலக்கிக் காட்டும் விசேஷ அடையாளங்கள். திருக்குறள் ஒரு தேதியில் பாட்டு, அடுத்த தேதியில் அதன் உரை உள்ளது.

10×15 அழகிய படத்துடன்விலை ரூ 1-75
முதுமொழிக் கலண்டர் „ 0-85
No. 1 டயறி ரூ 1-50
No. 2 டயறி ரூ. 0-85

பிந்தினால் கிடைப்பதரிது!

மெய்கண்டான்
அச்சியந்திரசாலை,
மட்டுவில், சாவகச்சேரி P.O.

விளம்பரம்

வெள்ளவத்தை - பம்பலப்பிட்டி பகுதிகளில் ஒவ்வொரு வீடுகளுக்கும் 'சுதந்திரன்' பத்திரிகை ஆள் மூலம் தினசரி கொடுப்பதற்கு ஒழுங்குகள் செய்திருக்கிறபடியால் தேவையானோர் கீழ்க்கண்ட விலாசத்திற்கு மனுச்செய்யவும்.

சந்தா பின்வருமாறு:-

1 மாதம்	ரூ. 2-00
3 மாதம்	ரூ. 6-00
6 மாதம்	ரூ. 12-00
12 மாதம்	ரூ. 24-00

மானேஜர்
'சுதந்திரன்',
194 A, தட்டாரத் தெரு,
கொழும்பு.

சுதந்திரன்
THE "SUTANTIRAN"
194 A, தட்டாரத் தெரு, கொழும்பு.
போன்: 3411.
சர்வஜித்து ஞு கார்த்திகை மீ 7உ
சனிக்கிழமை

தமிழர் ஏமாற மாட்டார்கள்!

லோர்ட் ஹோ ஹோ, என்பவர் ஒரு ஆங்கிலேயர். இவரைச் சென்ற மகா யுத்தத்தில் ஹிட்லர் பிரிட்டனுக்கு எதிராகப் பிரசாரஞ்செய்ய உபயோகித்தார். ஹிட்லர்தான் உலகத்தை உய்விக்க வந்த உத்தமர் என்று அவர் ஜெர்மன் ஆகாசவசனியில் பிரசங்கங்கள் செய்தார். பிரிட்டன், ஹிட்லரின் தலைமையை அங்கீகரிக்க வேண்டும்; ஜெர்மன் ஆட்சிக்கு அடிபணிய வேண்டும் என்று பல தடவைகளில் லோர்ட் ஹோ ஹோ கூறினர். பிரிட்டிஷார் சுதந்திரத்தை மதிப்பவர்கள். இவர் பேச்சை மதிக்கவில்லை தளரா ஊக்கத்துடன் போராடினர்கள். வெற்றியும் பெற்றார்கள் என்பதை நாம் கண்ணாரக் கண்டிருக்கிறோம்.

இந்த இனத் துரோகியை பிரிட்டிஷார் 'குவிஸலிங்' என்று அழைத்தார்கள் இப்பெயரை நோர்வே தேசத்துப் பிரதம மந்திரியிலிருந்துதான் பிரிட்டிஷார் பெற்றுக்கொண்டார்கள். அந்தக் குவிஸ்லிங்கும் இனத்துரோகம் செய்து ஜெர்மன் வெற்றிக்கு உழைத்தவராவர்.

இந்தமாதிரியான அடிமை மனப்பான்மை கொண்ட குவிஸலிங்குகள் நம் தமிழ் மக்களிடையே இன்று தோன்றியிருக்கிறார்கள். இவர்களுக்கு தங்கள் சுயநலத்திற்தான் கண்ணுங்கருத்துமேயல்லாமல் பொதுநலத்தைக் கனவிலும் கருதமாட்டார்கள். இவர்களில் ஒருவர் தமிழனின் சுதந்திரத்துக்கு உலைவைக்கும் முறையில் நேற்றுப் பிரசாரஞ்செய்யத் தொடங்கிவிட்டார். இந்திய தத்துவஞானியாகிய ஸர் ராதா கிருஷ்ணன், ஒரே உலகம் வேண்டும் என்று கூறியுள்ளாராம்; ஆகவே திரு சேனநாயககாவுக்குத் தமிழர் அடிமையாயிருக்கவே என்பதுதான் அவரது போதனையாகும் இதற்குப் பக்கபலமாக ஒரு ஆந்திரக்கார பெண்மணியின் திருகோணமலைப் பேச்சையும் எடுத்துக் காட்டுகின்றார்.

ஸேர் ராதா கிருஷ்ணன் உலகில் ஒரு மறியற்கூடம் தான் வேண்டுமென்று சொல்லவில்லை. ஆள் பலம் அல்லது சைனிய பலம் உள்ளவர்கள் தான் ஒ உலகத்தை' ஆளவேண்டுமென்றும் கூறவில்லை. அப்படி அவர் கூறுவதாயிருந்தால் இந்திய அரசாங்கமே தேவையில்லை. ஆள்பலங்கொண்ட சீன தேசத்திடம் அல்லது சைன்ய பலம் கொண்ட பிரிட்டனிடம் இந்தியாவை ஒப்படைத்துவிடலல்லவா? ஸேர் ராதா கிருஷ்ணன் கூறும் ஒரு உலகம் என்பது சுதந்திரம், சமத்துவம், சகோதரத்துவம் ஆகியவற்றை அடிப்படையாகக் கொண்டுள்ளதாகும். அவர் கூறுவது ஏகசக்ராதிபத்தியமல்ல.

இதைத்தான் அகில இலங்கைத் தமிழ்க் காங்கிரசும் வற்புறுத்தியிருக்கின்றது. தமிழ் மக்கள் இன்று அநாதைகள் போன்று சேனநாயக்கா அரசாங்கத்தால் நடத்தப்படுகின்றனர். தமிழ் மக்களின் சொந்த அதிகாரங்களையும் சுதந்திரத்தையும் மிகவும் ஜாக்கிரதையாகப் பாதுகாத்துக்கொள்ளத்தான் திரு. செல்வநாயகம் தனியாட்சி நாடும், கூட்டரசாங்கமும் உகந்தது என்று கூறியுள்ளார். தனியாட்சி நாட்டில் தமிழனின் சுதந்திரமும், கூட்டரசாங்கத்தில், சம அந்தஸ்தும், சகோதரத்துவமும் உண்டு என்பதை மறுப்பாரா திரு. சேனநாயக்காவின் அடிமைப் பிரசாரகர்?

ரஷியா என்று நாம் கூறும்போது அங்குள்ள பல தனித்த பிரதேசங்கள் ஒன்றாய்ச் சேர்ந்த ஒரு தொகுதி என்பதையே கருதுகிறோம். அதற்குள் சேர்ந்திருக்கும் ஒவ்வொரு தனியான தேசமும் தனது உள் நாட்டு அரசாட்சியைத் தானே நடத்திக்கொண்டு போகின்றது. பொது விஷயங்களையும் வெளிநாட்டு விவகாரங்களையும் மத்திய கூட்டு அரசாங்கம் நடத்துகின்றது. ஆங்குள்ள சிறுபான்மையினரின் சமத்துவம், சுதந்திரம் முதலியவற்றைக் காப்பாற்றவும், சகோதரத்துவத்தை ஏற்படுத்தவுமே இவ்விதம் ஆட்சியை அமைத்திருக்கின்றார்கள் இதை இந்நாட்டு குவிஸ்லிங்குகள் நன்கு உணர வேண்டும். இவர்களின் பிரசாரத்தால் தமிழ் மக்கள் ஏமாறமாட்டார்கள்

கம்பஹா தொகுதியில் தோல்வியுற்றவர்

அச்சுக்கூடப் பணம் செலுத்தவேண்டுமாம்

கொழும்பு, நவ. 21

கொழும்பு ஒமன்டே அச்சகத்தாரின் சொந்தக்காரரான திரு. டபிள்யூ ஈ. பஸ்தியான் கம்பஹா தொகுதிக்கு போட்டியிட்டு தோல்வியடைந்த திரு. வி ஏ. மத்தியூ என்பவர் தமக்கு தேர்தல் சுவரொட்டி விளம்பரங்கள் முதலியன அச்சடித்துக் கொடுத்ததற்கு ரூ 2310 தரவேண்டுமென்று கூறி ஒரு வழக்கை திரு. மத்தியூ மீது டிஸ்டிரிக்ட் கோர்ட்டில் தாக்கல் செய்துள்ளார். இவ்வழக்கு 1948 ஜனுவரி 16-ம் தேதி விசாரணைக்கு எடுக்கப்படும்.

தேசியப் பிரார்த்தனை தினம்

கொழும்பு, நவ, 21

பாராளுமன்ற திறப்பு விழாவுக்கு முதல் தினமாகிய திங்கட்கிழமையை தேசிய பிரார்த்தனை தினமாக கொண்டாடும்படி கவர்னரும், பிரதம மந்திரியும் மக்களுக்குத் தெரிவித்திருந்தனர். நேற்றிரவு உள்நாட்டுக் காரியாலயத்தில் இருந்து இது சம்பந்தமாக ஓர் அறிக்கை வெளியிடப்பட்டது அந்த அறிக்கையில் புதிய அரசியல் திட்டத்தின்படி வேலைகளை ஆரம்பிக்கும் தினத்திலே முதல் மதமக்கள் எல்லோரும் பிரார்த்தனை செய்வதற்கான ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன வென்றும் காலிபேஸில் உள்ள கிறைஸ்ட் சர்ச்சிலும் பாளிகாகந்தை பௌத்த ஆலயத்திலும், கண்டி தலதாமாளிகையிலும், கொட்டாஞ்சேனை சர்ச் லூசியா கதிட்ரலிலும் மருதானையிலுள்ள பள்ளிவாசலிலும், கொச்சிக்கடை பொன்னம்பலவாணேஸ்வரர், தட்டாரத் தெரு சுப்பிரமணிய சுவாமி கோவில், வெள்ளவத்தை பிள்ளையார் கோவில் ஆகியவற்றிலும் விசேட ஒழுங்குகள் செய்யப்பட்டுள்ளனவென்றும் பாராளுமன்ற அங்கத்தினரும் மற்றும் பொது மக்களும் பிரார்த்தனைசெய்ய ஒழுங்குகள் செய்யப்பட்டுள்ளனவென்றும் கூறப்படுகிறது.

பிரதம மந்திரி கிருகப் பிரவேசம்

கொழும்பு, நவ 21

கொள்ளுப்பிட்டியில உள்ள தமது காரியாலயமாகிய 'டெம்பிள்டரீஸ்" என்னும் வீட்டுக்கு நேற்று பிற்பகல் 1-10 மணிக்குள்ள சுப முகூர்த்தத்தில் பிரதம மந்திரி திரு டி. எஸ், சேனநாயகா பிரவேசம் செய்தார் பிரதமரும் அவரது மனைவியும், ஸர். ஒலிவர் குணத்திலகா முதலியோருடன் புதுக்கிருகத்திற்கு வந்து சேர்ந்தார்.

பள்ளிப் பிள்ளைகளுக்கு இலவச உணவு

உடனடியாக திருத்தியமைக்க மேயரின் வேண்டுகோள்

கொழும்பு நவ. 21

கொழும்பு நகரில உள்ள மதபாடசாலைகள் மற்றும் இலவச பாடசாலைகள் ஆகியவற்றில் ஏழைப் பிள்ளைகளுக்கு உணவு அளிக்கப்படுவது உடனடியாக திருத்தியமைக்கப்பட வேண்டுமென்று கொழும்பு மேயர் திரு. ஆர். எப். எஸ். டிமெல் அரசாங்கத்திற்குத் தெரிவித்துள்ளார்.

இப்பொழுது கொழும்பு நகரில் உள்ள பாடசாலைகளில் உணவு விநியோகிக்கப்படும் திருப்தியற்ற முறைகள் பற்றி தற்காலிக தர்மக் கமிஷனர் மேயரின் வேண்டுகோளபடி ஒரு அறிக்கையை அவரிடம் சமர்ப்பித்திருந்தார் அரசாங்கம் ஒரு பிள்ளைக்கு 10 சதம் ஒருநேர உணவுக்கு ஒதுக்கியிருப்பது போதாதென்றும் பிள்ளைகளுக்கு உணவு வழங்குவது, வழங்கப்படும் முறை முதலியன அவசியம் திருத்தியமைக்கப்படவேண்டுமென்றும் தற்காலிக தர்மக் கமிஷனர் திரு எஸ் வி. புளொக் அபிப்பிராயம் தெரிவிக்கின்றார்.

இ பிள்ளைகளுக்கு உணவு வழங்குவதற்கு அரசாங்கம் ரூ 120,000 மும் முனிஸிபல் சபை ரூ 80,000 மும் கொடுக்கிறது. இப்பொழுது இப்பிள்ளைகளுக்கு மார்க்கெட்டிங் இலாகாவினால் உணவு வழங்கப்படுவதுதான ஏற்றதென்று கூறப்பட்டுள்ளதாகத் தெரிகிறது.

இளவரசியின் திருமணப்பரிசு

படுக்கையறைத் தளபாடங்கள் அனுப்பப்படும்

கொழும்பு, நவ. 21

குடியேற்ற நாட்டு மந்திரிக்கு இலங்கை கவர்னர் அனுப்பிய தந்திச் செய்தியில் இளவரசிக்கு இலங்கையின் திருமண வாழ்த்தை தெரிவிக்கும்படி கேட்டுள்ளார்.

இளவரசியின் திருமணப் பரிசாக இலங்கையிலிருந்து பொருள்கள் அனுப்புவதற்கு கடந்த மந்திரி சபை ரூ. 15,000 மான்யம் ஒதுக்கியிருந்தது பரிசுகள் சம்பந்தமாக இளவரசிக்குத் தெரிவித்தபோது அவர் தமக்கு படுக்கையறைத் தளபாடங்கள்தான் விருப்பமென்று தெரிவித்திருந்தாராம். இதன் மேல் இப்பொழுது படுக்கையறைத் தளபாடங்கள் தயார் செய்து அனுப்புவதற்கு இங்கு ஏற்பாடுகள் நடக்கின்றன இன்னும் நான்கு மாத காலத்துள் இவை பிரிட்டனுக்கு அனுப்பி வைக்கப்படுமென்று கூறப்படுகிறது இவ்விபரங்கள் நேற்று வெளியிடப்பட்ட சர்க்கார் அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளன.

பிக்குகளைத் தாக்கியதாக கொண்டுவரப்பட்ட வழக்கு

விசாரணை ஒத்திவைக்கப்பட்டது

கொழும்பு, நவ 21

கடந்த செப்டம்பர் 14-ம் தேதி தொரணை சந்தியில் பிக்கு ராகுலவும் பிக்கு ரத்வத்தையும் தாக்கப்பட்டது சம்பந்தமாக என். டி. ஏ. பெர்னாண்டோ, ஜோன் பெரேரா, காலா சிங்கோ, எம். டி. பி. பெரேரா ஆகியோர் மீதும் மற்றும் இனம் தெரியாத பலர் மீதும் குற்றஞ்சாட்டித் தொடரப்பட்ட வழக்கு கொழும்பு தற்காலிக பிரதம மாஜிஸ்டிரேட் திரு. வி டி. பண்டிதகுணவர்தன முன் விசாரணைக்கு எடுக்கப்பட்டது. எதிரிகளில் ஒருவரான ஜோன் பெரேரா ஆஸ்பத்திரியில இருப்பதாகத் தெரிவிக்கப்பட்டது நவம்பர் 16-ம் தேதி இவர் சிலரால் தாக்கிக் காயம் விளைக்கப்பட்டார் என்று கூறப்பட்டது. நீதிபதி வழக்கு விசாரணையை 28-ம் தேதிக்கு ஒத்திவைத்தார்.

ஆசியாமீதுகுதிரையேறவெள்ளை

ஆஸ்திரேலியாவின் முயற்சி

தர்மசீலரான பண்டித நேருவே ஆசியாவின் தலைவர்

தென்னாப்பிரிக்க இந்தியர் பிரச்னை அகில உலக வெள்ளையர் எதிர்ப்புப் பிரச்னையாகிவிடும்

ஐக்கிய தேசபொதுச் சபையில் ஸ்ரீமதி விஜயலட்சுமி பண்டிட் எச்சரிக்கை

நியூயார்க், நவ 20

ஐக்கிய தேசப் பொதுச்சபையில் கொண்டுவரப்பட்ட தென்னாப்பிரிக்க இந்தியர் பிரச்னை பற்றிய தீர்மானத்தின் மீது இன்று விவாதம் நடைபெற்றது. இந்திய பிரதிநிதிக் கோஷ்டித் தலைவர் ஸ்ரீமதி விஜயலட்சுமி பண்டிட் பேசியபோது பின்வருமாறு தெரிவித்தார்:-

தென்னாப்பிரிக்கா இந்தியர்மீது எடுத்துக்கொண்டுள்ள துவேஷ நடவடிக்கையானது தென்னாப்பிரிக்காவிலுள்ள இந்தியர்களை மட்டுமல்ல, ஆசியாவிலும் ஆபிரிக்காவிலுமுள்ள மக்கள் அனைவரையும் பாதிக்கக்கூடிய விஷயமாகும் இவ்விஷயத்தில் நாங்கள் எங்களது உரிமைகளை மட்டும் நிலைநாட்டிக்கொள்ள வேண்டுமென்று கருதவில்லை எங்கள் சுயமரியாதையையும் கௌரவத்தையும் அவமதிக்கும் இந்த சவாலை எதிர்த்து ஒழித்துக் கட்டவேண்டுமென்பது எங்களது முக்கிய நோக்கமாகும் இந்த மாதிரியான தீர்மானத்தை இப்பொதுச் சபை நிறைவேற்றாவிடில் அதனால் ஆசியா ஆப்பிரிக்காவெங்கும் அபாயகரமான நிலைமை ஏற்படும். இந்நிலைமையை பிரிட்டிஷ் சாம்ராஜ்ய நாடுகளும் அமெரிக்காவும் உணரவேண்டும்

இத்தீர்மானம்தோல்வியுறின் ஐக்கிய தேசசாசனத்தின் கொள்கைகளை நாம குழிதோண்டிப் புதைப்பவர்களாவோம், அக்கொள்கைகளால் ஏற்படும் பலன்களை உலகில் கோடிக்கணக்கான மக்கள் இழந்துவிடுவர். ஐக்கிய தேச ஸ்தாபனத்தின் அஸ்திவாரமே அசைவுறும். ஐக்கிய தேச சாசனக்கொள்கைகளையே எதிர்த்து ஐக்கிய தேச ஸ்தாபனத்தின் பல கமிட்டிகளிலும் பல கோஷ்டிகள் தங்கள் பலமான எதிர்ப்புகளைக் காட்டியிருக்கின்றன. எங்கள் கொள்கையானது கண்ணியமான முறையில ஏற்கப்படவேண்டும். ஆதலால் இத்தீர்மானத்தின் மீது இ பொதுச் சபை தெளிவான சிந்தனையைச் செலுத்தி தீர்ப்பளிக்குமென்று கருதுகிறேன்

சென்ற வருடம் பொதுச் சபை செய்த தீர்மானத்தின்படி தென்னாப்பிரிக்கா நடந்துகொள்ளாததால், தென்னாப்பிரிக்க இந்தியர் பிரச்னையைக் குறித்து தென்னாப்பிரிக்காவும் இந்தியாவும் சமரச மகாநாடு கூடி பிரச்னையை தீர்த்துக்கொள்ள வேண்டுமென்று ஸ்ரீமதி விஜயலட்சுமி பண்டிட் கொண்டுவந்த தீர்மானத்திற்கு சாதகமாக 31 வோட்டுகளும் பாதகமாக 19 வோட்டுகளும் கிடைத்தன. ஆகவே மூன்றில் இரண்டு பங்கு அதிகப்படியான வோட்டுகளால் பொதுச் சபை இத்தீர்மானத்தை நிறைவேற்றத் தவறிவிட்டது.

ஆசியா பூராவுக்கும் சொந்தமானவர் நேரு

புதுடில்லி, நவ 19

"பண்டித நேருவின் தலைமையில் பெருமை கொள்வது இந்தியர் மட்டுமல்ல; இந்தோனேஷியரும் பெருமை கொள்கின்றனர். ஏனெனில நேரு இந்தியாவுக்கு மட்டுமின்றி ஆசியா பூராவுக்கும் சொந்தமானவர்" என்று இந்தோனேஷியப் பிரதமர் டாக்டர் அமிர் ஷரிபுதீன் ஜோக்ஜகர்த்தாவில் பண்டித நேருவின் பிறந்த தினக் கொண்டாட்டத்தில் பேசுகையில் கூறினர்.

இக்கொண்டாட்டம் ஜோக்ஜகர்த்தாவிலுள்ள இந்திய, பாகிஸ்தான் சங்கத்தின் ஆதரவில் நடைபெற்றது. பண்டித நேருவுக்கு தமது பாராட்டுதலையும் தங்களுக்கு அளித்த உதவிக்காக இந்திய மக்களுக்கு நன்றியும் தெரிவிக்கும்படி ஸ்ரீ ஷரீபுதீன் இந்திய ஸ்தானிகர் காரியாலயத்தைச் சேர்ந்த ஸ்ரீ பூனாவிடம் கேட்டுக் கொண்டார்.

கொண்டாட்டத்துக்கு ஆயிரக்கணக்கானவர்கள் வந்திருந்தனர். குடியரசுத் தலைவர் சுகர்ணோ பிரதமர் ஷரீபுதீன் குடியரசு மந்திரிகள், சீன ஸ்தானிகர் முதலியோர் வந்திருந்தனர்.

ஆசியா மீது குதிரை ஏற வெள்ளை ஆஸ்திரேலியா முயற்சி

கான்பரா, நவ 20

ஆஸ்திரேலிய பிரதம மந்திரி ஜோஸப் சிவி இன்று பின்வருமாறு தெரிவித்தார்:- தென்கிழக்கு ஆசியா கமிஷன் ஸ்தாபிப்பதற்கு ஒப்புக் கொண்ட நாடுகளின் பிரதிநிதிகள் அடுத்த வாரம் சிட்னி நகரில் கூடுவர். அது சம்பந்தமாக நிறுவப்பட்ட இடைக்கால ஸ்தாபனம் இது வரை செய்துள்ள வேலைகளை அவர்கள் பரிசீலனை செய்வார்கள். தென்கிழக்கு ஆசியா கமிஷன் நிறுவப்பட்டு அதன்வேலைகள் துரிதமாக ஆரம்பமாக அவர்கள் முடிவு செய்வார்கள். இக்கமிஷனைச் சேர்ந்தநாடுகள் தங்களின் கீழ்ப்பட்ட சுயாட்சி இல்லாத நாடுகளின் பொருளாதார சமூக அபிவிருத்திபற்றி தென்கிழக்கு ஆசியா கமிஷன் வேலை செய்யும்.

பிரிட்டன், அமெரிக்கா, ஆஸ்திரேலியா, பிரான்ஸ், நியூஜிலந்து, ஹாலந்து ஆகிய 6 நாடுகளும் இக்கமிஷனில் [illegible] அங்கம் வகித்து வேலை செய்ய இவ்வருடம் பெப்ரவரி மாதத்தில கான்பரா நகரில் வைத்து ஒப்பந்தம் செய்துகொண்டிருக்கின்றன. அடுத்தவாரக் கூட்டத்தில் கமிஷன் நிறுவப்படும். அதன்வேலை 1948 வது ஆரம்பத்தில் துவங்கப்படும்.

[ராய்ட்டர்]

மோட்டார் சைக்கிள் விபத்தில் மூவருக்குக் காயம்

கொழும்பு, நவ. 21

பம்பலப்பிட்டியில் புள்ளர்ஸ் ரோட்-காலிரோட் சந்தியில் ஒரு மோட்டார் சைக்கிள் விபத்தில் மூவர் காயமடைந்தனர். இவ் விபத்தில் காயமடைந்த திரு. எஸ். டி. எம். விக்கிரமசிங்கா, திரு எம். எம். மெண்டிஸ, திரு. வி. ஏ. பெரேரா ஆகிய மூவரில் கடைசி நபர் மயக்கமடைந்த நிலையில் ஆஸ்பத்திரிக்கு அனுப்பப்பட்டார்

கொட்டாஞ்சேனை கொலை வழக்கு

விசாரணை ஒத்திவைக்கப்பட்டது

கொழும்பு, நவ. 21

கொட்டாஞ்சேனை காலேஜ் வீதியில் திரு ஜி டி. டி. சில்வா செனிவிரத்ன என்பவர் கொலை செய்யப்பட்டது சம்பந்தமான வழக்கு கொழும்பு தற்காலிக மாஜிஸ்டிரேட் திரு. வி டி. பண்டித குணவர்தன முன் விசாரணைக்கெடுக்கப்பட்டது.

இவ்வழக்கில் தர்மசேன என்பவர் திரு செனிவிரத்னவைக் கொலை செய்ததாக குற்றம் சாட்டப்பட்டுள்ளார். ஸ்ரீமதி செனிவிரத்னவும் கோர்ட்டில் ஆஜர் செய்யப்பட்டார். ஸ்ரீமதி செனிவிரத்ன சம்பந்தமான விசாரணைகள் இன்னும் முடிவுறவில்லையென்று கொட்டாஞ்சேனை இரகசியப் பொலிஸ் பகுதி சப்-இன்ஸ்பெக்டர் திரு எல். டி. வி. சோர்டன் தெரிவித்து ஸ்ரீமதி செனிவிரத்னவை டிஸம்பர் 1-ம் தேதி வரையும் ரிமாண்டில் வைக்கும்படி கேட்டுக்கொண்டார். இவ்வழக்கு விசாரணையை டிஸம்பர் 1-ம் தேதிக்கு நீதிபதி ஒத்திவைத்தார்.

மின்னலால் தாக்குண்டு மருத்துவர் மரணம்

கொழும்பு, நவ. 21

பொதுபிட்டியாவைச் சேர்ந்த ஒரு மருத்துவன் புதன்கிழமை வழமைபோல க்ஷவரம் செய்துகொண்டிருக்கையில் மின்னலால் தாக்குண்டு மரணமானர்

தொழிலாளர் நலன்களில் இலங்கையின் கவனக்குறை

திரு. செனிவிரத்ன பிரசங்கம்

பாம்கார்டன் வேலைநிறுத்தம் பற்றி இந்திய தலைவர்கள் கருத்து

தோட்ட முதலாளிகளின் அநாகரீகத் தடைகளை நீக்க இந்தியா தொழில் மந்திரி நடவடிக்கை

ரத்னபுரி, நவ 20

நேற்று மாலை 4 மணிக்கு திரு ஏ அஸீஸ் தலைமையில் எஸ்பிளனேடில் பெரியதோர் பொதுக்கூட்டம் நடைபெற்றது அக்கூட்டத்தில் இலங்கைக்கு விஜயம் செய்திருக்கும் தமிழ்நாடு காங்கிரஸ கமிட்டி உப தலைவர் திரு வி எம். உபயதுல்லாவும், சென்னை சட்டசபை அங்கத்தினரான திரு. தேவநாயகமும் பாம் கார்டன் தோட்டத் தொழிலாளர் வேலை நிறுத்தம் செய்துவருவதுபற்றிப் பேசினர்கள்.

திரு தேவநாயகம் தெரிவித்ததாவது:—சர்க்கார் செய்துள்ள தீர்மானங்களை முதலாளிகள் கட்டாயமாக ஏற்றுக்கொள்ளவேண்டுமென்று இந்தியாவில் தொழிலாளர் சட்டங்களிருக்கின்றன. தொழிலாளர்கள் வேலைநிறுத்தம் செய்யும்போது அவர்களுக்குப் பதிலாக முதலாளிகள் கருங்காலிகளை வேலைக்கமர்த்தவும் முடியாது, ஆனால் இலங்கையிலே நிலைமை முற்றும் மாறாக இருக்கிறது. இங்கு சர்க்கார் செய்யும் முடிவை முதலாளிகள் கட்டாயமாக ஏற்றுக்கொள்ளும்படி செய்ய முடியாத நிலை இருந்து வருகிறது வேலைநிறுத்த சமயத்தில நெருக்கடியை தீர்க்கவோ அல்லது கருங்காலிகளை வேலைக்கமர்த்தவோ முடியாது முதலாளிகளுக்கு தடை விதிக்க சர்க்காரால் முடியாத நிலைமையுமிருந்து வருகிறது.

ஒக் கே. ராஜலிங்கமும் திரு. அசீஸும் பேசியபோது தெரிவித்ததாவது:— பாம்கார்டன் தோட்ட முதலாளிகள் வேலையிலிருந்து நீக்கப்பட்ட தொழிலாளர்களை வேலைக்கு அமர்த்தும் வரையிலும், அத்துமீறி தொடரப்பட்ட எல்லா கிரிமினல் வழக்குகளையும் முதலாளிகள் ரத்து செய்யும்வரையும் தொழிலாளர் வேலைநிறுத்தம் தொடர்ந்து நடைபெறும்.

சென்ற 22 தினங்களாக 1700 தொழிலாளர்கள் பாம்கார்டன் தோட்டத்தில் வேலைநிறுத்தம் செய்துவருகிறார்கள். இப்பொழுது அங்கு 73 தமிழ்த்தொழிலாளர்கள் மட்டும் வேலைசெய்துவருகிறார்கள் 470 சிங்களத் தொழிலாளர்களை கருங்காலிகளாக முதலாளிகள் வேலைக்கமர்த்தியிருக்கிறார்கள்.

தொழிலாளர் சுபீட்சத்தில் இலங்கையின் கவனக்குறை

கொழும்பு, நவ. 20

இலங்கை தொழில் இலாக்காவைச் சேர்ந்த திரு. பி ஏ. செனிவிரத்ன நேற்று தாழ்ந்த பிரதேச தோட்ட முதலாளிகள் சங்க மண்டபத்தில நடைபெற்ற கூட்டத்தில் "தொழிலாளர் சுபீட்சம்" என்னும் விஷயம்பற்றி சொற்பொழிவு நிகழ்த்தியபோது பின்வருமாறு தெரிவித்தார்:-

தொழிலாளர்கள் சுபீட்சமாக வாழ்வதற்காக முதலாளிகள் செய்யும் உதவிகளை தர்மமாக முதலாளிகள் கருதலாகாது. தொழிலாளர் நலன் சம்பந்தப்பட்ட இயக்கங்களினால் பயன் அனுபவிப்பவர்களே தொழிலாளர் இயக்கத்தில் ஈடுபட்டு அதை நிர்வகித்து நடத்தவேண்டும். தொழிலாளர் இயக்கத்தை முதலாளிகளின் ஆதிக்கத்தில விடலாகாது.

தொழிலாளர் நலன்களைப் பாதுகாத்து அவர்களுக்கு சுபீட்ச வாழ்க்கையை ஏற்படுத்துவதில் இங்கிலாந்து எவ்வளவோ முற்போக்கடைந்துள்ளது. 1937-வது வருடத்திய தொழிற்சாலை சட்டப்படி முதலாளிகள் தொழிலாளர்களின் நலன்களுக்காக எவ்வளவோ உதவிசெய்யக் கடமைப்பட்டிருக்கிறார்கள்.

தொழிலாளர்களின் குடும்ப நலன்களுக்காக வசதி செய்து கொடுக்கவும் அங்கு முதலாளிகள் கடமைப்படுத்தப்பட்டிருக்கிறார்கள்.

தொழிலாளர்களுக்கு இவ்விதம் செய்யும் உதவி தர்மமல்ல. தொழிலாளர் சுபீட்சமாக இருந்தால்தொழில் நன்கு நடைபெறும். அதனால் உற்பத்தியும் அதிகரித்து முதலாளிகளுக்கும் லாபம் உண்டாகும், நாட்டிற்கும் பயனுண்டு

தொழிலாளர் நலன்களைப் பற்றி இலங்கையில் இன்னும் கவனக்குறைவு இருந்து வருகிறது. இங்கிலாந்திலுள்ள சட்டங்களைப் பின்பற்றி இலங்கையிலும் தொழிலாளர் நலன்கள் சம்பந்தமாக சட்டங்கள இயற்றப்படவேண்டும்.

தோட்டங்களில் அங்கேயே குடியிருக்கும் தொழிலாளர்களும் உள்ளூர் கிராமத் தொழிலாளர்களும வேலை செய்கிறார்கள். இந்த இருவிதமான தொழிலாளர்களுக்கும பயனேற்படக்கூடிய முறையில் சுபீட்ச நடவடிக்கைகள் எடுத்துக்கொள்ளப்படவேண்டும்.

தோட்டங்களில் வீட்டு வசதிகளும், களைப்பாறுவதற்கு இட வசதிகளும் கூட்டுறவு சங்கங்களும் ஏற்படுத்தவேண்டும். தோட்டங்களில் குடியிருந்து வேலை செய்யாத தொழிலாளர்களுக்கு சர்க்கார் நடத்தும் கிராமாபிவிருத்தித் திட்டத்தின பயன் கிடைக்கும்படி செய்யவேண்டும்.

ஆசிய தொழிலாளர் மகாநாட்டுக்கு டில்லி சென்றிருந்த இலங்கைப் பிரதிநிதி திரு சி. எச் இஸட். பெர்னாண்டோ பேசியபோது, தொழிலாளர் சம்பந்தமாக திரு செனிவிரத்ன விஷயங்களை நன்கு தெரிந்தவரென்றும் அடுத்த ஜூன் மாதம் இலங்கையில் ஆசிய தொழிலாளர் மகாநாடு நடைபெறும்போது அவர் மிகவும் உபயோககரமாக இருப்பாரென்றும் தெரிவித்தார்.

கூட்டத்திற்கு செனட் சபை அங்கத்தினர் திரு சி ஏ. எம். டி சில்வா தலைமை வகித்தார்.

தோட்டங்களில் விசித்திர நிலைமை

புதுடில்லி, நவ. 19

இந்திய பாராளுமன்றத்தில் நேற்று தொழில் மந்திரி ஜகஜீவன்ராம் தொழிற் சங்க சட்டத் திருத்த மசோதாவைப் பிரரேபித்துப் பேசியபோது பின்வருமாறு தெரிவித்தார்:-

விவசாயத்தில் ஈடுபட்டுள்ள தொழிலாளர்கள் சம்பந்தமாக தொழிலாளர் தலைவர்கள் போதிய கவனம் செலுத்தவில்லை. விவசாயிகள் இயக்கமும் ஸ்தாபனங்களும் நிறுவப்படவேண்டும். இந்த மசோதா இந்த நோக்கத்துடனேயே கொண்டுவரப்பட்டுள்ளது.

தோட்டத் தொழிலாளர்கள் சம்பந்தமாக விசித்திரமான

(4-ம் பக்கம் பார்க்க)

கலகப் பிரதேசங்களில் குற்றமிழைப்போருக்கு மரண தண்டனை

சென்னை சர்க்காருக்கு அதிகாரமளித்து மசோதா

கலகங்களை ஒடுக்க சர்க்கார் ஏற்பாடு

சென்னை, நவ 19

சென்னை மாகாணத்தில் கலகங்கள் ஏற்பட்டால் அதை ஒடுக்க சர்க்காருக்கு சில அதிகாரங்கள் அளித்து இன்று ஒரு மசோதா பிரசுரமாயிருக்கிறது.

இதன்படி மாகாணம் பூராவையும் அல்லது எந்தப் பகுதியையும் கலகப் பிரதேசமென சர்க்கார் பிரகடனம் செய்யலாம். கலகப் பிரதேசங்களில் இ. ப. கோ. 307, 363, 364, 365, 366, 367, 368, 376, 392, 394, 395, 396-வது பிரிவின்படி குற்றம் செய்தால் மரண தண்டனையளிக்க இந்த மசோதா அதிகாரமளிக்கிறது. இக்கொடுமையான குற்றங்களைச் செய்வதற்கு உடந்தையாக இருப்பவர்களுக்கும் செய்ய முயற்சிப்போருக்கும் மரண தண்டனை விதிக்கப்படலாம்.

மாஜிஸ்டிரேட்டுகளும், ஹெட் கான்ஸ்டபிள் பதவிக்குக் குறையாத போலீஸ் உத்தியோகஸ்தர்களும் சட்டத்தை மீறுவோரை தக்கபடி எச்சரிக்கை செய்தபின் சுடவும் அதிகாரமளிக்கப்பட்டிருக்கிறது.

புருஷ கர்ப்பம்!

சிறுவனின் வயிற்றிற்குள் 8 அங்குல சிசு

புக்காரெஸ்ட், நவ. 19

11 வயதுள்ள ஒரு சிறுவனின் வயிற்றுக்குள்ளிருந்து 5 மாத சிசு எடுக்கப்பட்டிருப்பதாக ருமேனிய பத்திரிகைகள் கூறுகின்றன. மேற்கு ருமேனியாவைச் சேர்ந்த டிமிஸோரா என்னுமிடத்தில் லாஸ்லோ என்னும் ஒரு சிறுவன் வயிற்றுவலியால் நீண்ட காலமாக மிகவும் கஷ்டப்பட்டுக்கொண்டிருந்தான். டாக்டர் எமில்ஸ் டோபான் என்னும் ராணுவ சர்ஜன் அச் சிறுவனின் வயிற்றில் ஆப்பரேஷன் செய்தார். என்ன ஆச்சரியம்! சிறுவனின் குடலுக்கு மேலே ஒரு சிசு (கரு) ஒட்டிக்கொண்டிருந்ததை டாக்டர் பார்த்தார். அச்சிசு தனக்கு வேண்டிய உணவை குடலிலிருந்தும், ரத்தக் குழாய்களிலிருந்தும் உட்கொண்டு கொண்டிருந்தது.

[illegible] பிரசவமாகாத சிசு 8 அங்குல நீளம் இருந்ததாகவும் அது அங்கஹீனம் ஒன்றும் இல்லாமல் பூரணமாக அமைந்திருந்ததாகவும் கூறப்படுகிறது.

இத்தகைய புருஷ கர்ப்பத்திற்கு என்ன காரணம் என்று தெரியவில்லை. மேற்கூறிய சிசு சென்ற 5 மாதமாகச் சிறுவனின் வயிற்றிற்குள் வளர்ந்து வந்திருப்பதாக சர்ஜன்கள் கூறுகின்றனர்.

பிரான்சிற்குப் புதிய பிரதமர்

திரு. பிளம் நியமனமானார்

பாரிஸ், நவ. 20

பிரான்சில் பிரதமர் பால் ராமடியர் தமது பதவியை ராஜிநாமாச் செய்ததன் காரணமாக குடியரசுத் தலைவர் அவுரியோல் சோஷியலிஸ்டு தலைவரான லியோன் பிளம்மை பிரதமராக நியமனம் செய்துள்ளார்.

நாளை திரு. பிளம் தேசிய சபையில் ஆஜராகி தான் அமைக்கும் புதிய மந்திரி சபையின் கொள்கைகளை விளக்கப் படுத்துவார். அதன் பின் தனது கொள்கைக்கு நம்பிக்கைத் தீர்மானம் ஒன்று நிறைவேற்றப்படும் பட்சத்தில் உடனடியாக அவர் மந்திரி சபை அமைக்கும் முயற்சியில் ஈடுபடுவாரெனத் தெரிகிறது.

வேலை நிறுத்த நிலை

ஆறு லட்சம் பிரெஞ்சுத் தொழிலாளரின் வேலை நிறுத்தம் தீவிரமாக நடந்து கொண்டிருக்கிறது. குடியரசுத் தலைவர் அவுரியோல் தொழிலாளரை வேலைக்கு மீண்டும் செல்ல வேண்டுமெனக் கேட்டுக் கொண்டுள்ளார்.

இன்று வேலை நிறுத்த சம்பளக் கோரிக்கையை ஆதரிக்கும் கமியூனிஸ்டு செல்வாக்கு மிகுந்த தொழிலாளர் சம்மேளனக் காரியதரிசி குடியரசுத் தலைவர் அவுரியோலைச் சந்தித்துப் பேசினர். (ராய்ட்டர்)

சிங்களப் பத்திரிகை எழுதுவது:

கைதிகளுக்கு சிறைக்குள் அளிக்கப்படும் சுதந்திரம் போன்றதே!

இலங்கை பெறப்போகும் டொமினியன் அந்தஸ்து

அயல் நாடுகளான இந்தியா, பர்மா சுதந்திரங்களைக் கண்டும் இலங்கை மக்களை ஏமாற்ற முயலும் யூ. என். பி. கோஷ்டி

வெள்ளிக்கிழமை பிரசுரமான அகில இலங்கை பௌத்த பிக்குகள் சங்கத்து பத்திரிகையான "காலய" அரசியல் நிருபர் எழுதியவற்றின் தமிழாக்கம்:

இலங்கைக்கு கிடைக்கப்போகிற சுதந்திரம் சம்பந்தமான யாதாஸ்தும் அறிக்கைகளும் பத்திரிகைகளில் பிரசுரமாயிருப்பவற்றை தேசமக்கள் வாசித்து கவனிக்க வேண்டியதவசியம். அப்பொழுது, நமக்குகிடைக்கப்போவது சுதந்திரமா வென்ற சந்தேக முண்டாய்விடும்.

உண்மையிலேயே, சுதந்திரமானால் "நிபந்தனைகள்" ஏற்படவேண்டியதில்லை. சுதந்திரமானால் கட்டுப்பாடு இருக்க வேண்டியதுமில்லை.

இலங்கைக்கு கிடைக்கப்போகிற சுதந்திரமானது, பிரிட்டிஷ் சாம்ராஜ்ய மண்டலத்தின் எல்லைக்குள் வரையறுக்கப்பட்ட சுதந்திரம் தான் என்று, எல்லோரும் கருதுவதில் குற்றமில்லை.

எனினும் கிடைக்கப்போவது வரையறுக்கப்பட்ட சுதந்திரம் தான் என்பதில் ஐயப்பாடு வேண்டாம். அதாவது சிறைக்கோட்டத்திற்குள்ளே சில கைதிகளுக்கிருக்கும் மட்டான சுதந்திரத்திற்கு சமானமாகும். சில கைதிகளுக்கு சிறைக்குள்ளே மாத்திரம் யதேச்சையாக சுற்றித் திரிவதற்கு சுதந்திரம் இருக்கிறதுதானே, எவரேனும் வெளியே சென்றால் உள்ளதும் போச்சு நொள்ளைக் கண்ணு!

அத்தகைய சுதந்திரம்தான் இலங்கைக்கும் பிரிட்டிஷ் சாம்ராஜ்யத்துள்ளே கிடைக்கிறதாப்போல் இருக்கிறது. சாம்ராஜியக் கட்டுப்பாட்டை மீறி சுதந்திரமாக நடந்து கொள்ள முடியாது என்று இதனால்தெளிவாகிறது.

அவை எப்படியாயினும், சுதந்திரம் என்றால் நிபந்தனை எதற்கு? நிபந்தனையுண்டானால் அது சுதந்திரமாகுமா? நமக்கு கிடைக்கப்போகிறதென்று சொல்லப்படுகிற சுதந்திரத்திற்குமுன் கூட்டியே சில நிபந்தனைகளுக்கு கைச்சாத்திட்டிருப்பது இப்பொழுது பகிரங்கம். அந்த நிபந்தனைகள் என்ன-எப்படியாய் இருந்தாலும் காரியமில்லை. சாம்ராஜயத்திற்கு அநுகூலமான நிபந்தனைகளுக்கு கைச்சாத்திட்டபின் அது சுதந்திரமாகமாட்டாதென்று தெரியாதவர்கள் யூ என் பி. காரர்களை தவிர வேறுயாருமில்லை.

சுதந்திரமுடைய இரு நாடுகளுக்கிடையே சரிநிகர் சமானமான அந்தஸ்துடன்தான் சுதந்திர உடன்படிக்கை செய்து கொள்ள முடியும். எனினும் இங்கிலாந்திற்கும் இலங்கைக்கும் அப்படியொரு உடன்படிக்கையேற்படுவதற்கு சிறிதும் இடமில்லை. இப்போதுள்ள நிலைமையில், இங்கிலாந்திற்கும் இலங்கைக்கும் ஒப்பந்தம் ஏற்பட்டால், அது இங்கிலாந்திற்கு மட்டற்ற அநுகூலங்களை நிரந்தரமாக வைக்குக் கொள்ளக்கூடியதாகவும், இலங்கையை இன்னும் அடிமைத்தனையில் இருக்கக்கூடியதாகவும் இருக்குமென்று எண்ணுவதில் எவ்வித சந்தேகமும் வேண்டியதில்லை.

இந்தியா-பர்மா முதலிய நாடுகளின் சுதந்திரத்தைப்பற்றி கேட்டிருக்கிறோம். அங்கே நிபந்தனைகளோ "எக்ரிமெண்டோ" இல்லவே இல்லை. பிரிட்டிஷ் சாம்ராஜ்யத்துள்ளே தான் இருக்கவேண்டுமென்பதும் இல்லை. அத்தேச மக்கள் விரும்பியபடி அரசியல் நிர்வாகம் செய்யலாம். இதன்படி இந்தியாவும் பர்மாவும் தமக்குகந்த முறையில் அரசியல் முறையை நிர்ணயித்துக் கொண்டது.

எனினும், சுதந்திரம் கிடைக்கப்போகிறதாகச் சொல்லப்படும் இலங்கையின் எதிர்கால அரசியலை யார் நிர்ணயித்தார்கள்? இத்தேச மக்களா? பொதுஜனப் பிரதிநிதிகளா? இவையெல்லாம் அப்பன் சோல்பரி வகுத்த அரசியல் திட்டம்தான்.

இத்தேச பொதுஜனப் பிரதிநிதிகளைக் கொண்ட அரசியல் நிர்ணய சபை மூலமாக நமக்கு வேண்டிய அரசியல் திட்டத்தை வகுத்துக்கொள்ள இந்தச் சுதந்திரத்தினால் நமக்கு உரிமை கிடைக்குமா? முடியவே முடியாது. அப்படியானால், சொல்லப்படுகிற சுதந்திரம் கிடைத்த பின்னும் எங்கள் தேசத்தை எங்களுக்கு வேண்டியபடி வகுக்கப்பட்ட அரசியல் முறையினால் ஆட்சிசெய்யமுடியாது. அதற்குப்பதிலாக சாம்ராஜ்யத்திற்கு தூபம் போடுகிறவர்களுக்கு அநுகூலமாக வகுக்கப்பட்ட சோல்பரி அரசியல் திட்டத்தின்படியே இத்தேச நிர்வாகம் நடைபெறும். இது சுதந்திரமா?

எங்களுக்கு டொமினியன் அந்தஸ்து கிடைக்கப்போவதாக சிலர் சொல்லுகிறார்கள். எனினும் இங்கிலாந்து பார்லிமெண்டில் சமர்ப்பிக்கப்பட்டிருக்கும் "இலங்கை சுதந்திர மசோதா"வில், இத்தேசத்திற்கு "டொமினியன் அந்தஸ்து" பற்றி எந்த இடத்திலும் குறிப்பிடப்படவில்லை.

ஆனால் "பிரிட்டிஷ்சாம்ராஜ்யத்திற்குள்ளே பூரண பொறுப்பாட்சி அந்தஸ்து"தான், இத்தேசத்திற்கு வழங்கப்படுமென்று காணப்படுகிறது.

நமக்கு வழங்கப்படுவது டொமினியன் அந்தஸதானால், அதை ஒரேயடியாக தெளிவாகச் சொல்லாமல் வேறு சொற்றொடர்களைச் சேர்த்து வசனங்களை அமைத்து நீட்டி சொல்லுவானேன்? இவ்வசன அமைப்புகளினால் சொல்லப்படுவதாவது:- டொமினியன் அந்தஸ்துதானென்று, இங்கேயுள்ள சில அரசியல் பண்டிதர்கள் பிரசாரம் செய்து கொண்டிருக்கிறார்கள்.

இந்திய சுதந்திர பிரகடனத்தில் "டொமினியன்" என்று தெளிவாக குறிப்பிட்டிருப்பதைப் பாருங்கள் கானடா முதலிய தேசங்களின் அரசியல் திட்டங்களில் "டொமினியன்" என்று தெளிவாக கூறப்பட்டிருப்பதைப் பாருங்கள்! அங்கேயெல்லாம் தெளிவாக 'டொமினியன் அந்தஸ்து என்று கூறிக்கப்பட்டிருக்கிறதேயொழிய 'பிரிட்டிஷ் சாம்ராஜ்யத்திற்குள்ளே பூரண பொறுப்பாட்சி அந்தஸ்து" வழங்குவதாக குறிப்பிடப்பட்டிருக்கவில்லை.

இப்படியிருக்கும்போது "சேனநாயகா குடும்பத்தினரின் இலங்கை சுதந்திர மசோதா"வை விளக்கிக் காட்டுவதற்கு "அரசியல் ரிஷி"கள் வேண்டியதில்லை. சாதாரண அறிவுடைய யாவருக்கும் இந்த சூழ்ச்சிகரமான அர்த்தத்தின் வித்தியாசத்தை அறிந்துகொள்ள முடியும்.

பாதுகாப்பு சபையின் தீர்மான ரத்துரிமை

நியூயார்க், நவ 19

பாதுகாப்பு சபை நிறைவேற்றும் தீர்மானங்களை வல்லரசுகள் தங்கள் விசேஷ வாக்கைப் பிரயோகித்து ரத்து செய்யும் உரிமையைக் கட்டுப்படுத்துவது குறித்து புதிதாக நிறுவப்படும் நிரந்தரமான ஐக்கியதேச சிறு பொதுச் சபை முடிவுசெய்ய வேண்டுமென்றும், பாதுகாப்பு சபையின் தீர்மானங்களை உருப்படியாக அமுல் செய்வதுபற்றி அரசியல் கமிட்டி தக்க ஆலோசனை செய்ய வேண்டுமென்று இன்று ஐக்கியதேச அரசியல் கமிட்டி தீர்மானித்தது. (ராய்ட்டர்)

தியாகத்தாற் பெறும் சுதந்திரமே நிலைநிற்கும்

வரவேற்புக் கூட்டத்தில் பலர் பேச்சு

கொழும்பு, நவ. 21

இலங்கை இந்தியக் காங்கிரஸ் கொழும்பு ஜில்லாக் கமிட்டியின் ஆதரவில் கொழும்பு விவேகானந்த சபை மண்டபத்தில் தமிழ்நாடு காங்கிரஸ் கமிட்டி உப தலைவர் ஜனாப் வி. எம். உபயதுல்லா, திரு எஸ். ஏ. தேவநாயகம் ஆகியவர்களுக்கு ஒரு பொது வரவேற்பு அளிக்கும்முகமாக ஒரு கூட்டம் திரு. பெரிசுந்தரம் தலைமையில் நடைபெற்றது.

தலைவர் பேசுகையில் கூட்டத்தின் நோக்கம்பற்றியும் வரவேற்பளிக்கப்படும் பிரமுகர்கள்பற்றியும் குறிப்பிட்டார். இதன பின் திரு எஸ். ஆர் வள்ளியப்பச் செட்டியார் பேசுகையில் இந்திய மக்கள் தம்மை இலங்கை மக்களாக எண்ணி இலங்கையின் சுதந்திரத்திற்காகப் பாடுபட்டுழைக்கவேண்டுமென்றும் எவ்வித தியாகமுமின்றி இப்பொழுது பெற்ற சுதந்திரம் நிலையானதல்லவென்றும் பூரண சுதந்திரத்தைத் தியாகம் புரிந்தே பெறவேண்டுமென்றும் கூறினர்.

இவருக்குப் பின் திரு கே. இராஜலிங்கம் இலங்கையிலுள்ள இந்திய மக்கள் பிரச்னை பற்றியும் இலங்கையின் சுதந்திர மசோதாபற்றியும் ஷாப்பு சட்டம்பற்றியும் பேசினர்.

திரு எஸ். ஏ. தேவநாயகம் பேசுகையில் உண்மையான அபிப்பிராயங்களை எடுத்துச் சொல்வதற்குத் தயங்கப்படாதென்றும் பிறந்த நாட்டை விட்டு வெளிநாடு சென்று குடியேறிய இந்திய மக்கள் கஷ்டப்படுகிறார்களென்றால் அது பிறந்த நாட்டின் துர்ப்பாக்கியமென்றே கருத வேண்டுமேயன்றி புகுந்த நாட்டின்மீது அடிபழியைச் சுமத்தப்படாதென்றும், இந்தியா சுதந்திரமடைந்துவிட்டதென்று கூறி அங்கு சென்று சுபீட்சமாக வாழலாமென்று வெளியேறியவர்கள் கருதிச் சென்றால் அவர்களுக்கு அங்கு வரவேற்புக் கிடைக்குமாவென்பது சந்தேகந்தானென்றும் இலங்கையும் இந்தியாவும் எந்நாளும் நேசமாகவே வாழவேண்டுமென்றும் ஆசிய சுதந்தரத்திற்கு அது மிக முக்கியமென்றும், வெளியிடங்களில் இந்திய மக்கள் அவமதிக்கப்பட்டால் அதனை இந்தியா இனிமேலும் சகிக்கமாட்டாதென்றும் கூறினர்.

தொடர்ந்து அவர் பேசுகையில் ஆசிய நாடுகள் ஒற்றுமை பொருளாதார வளர்ச்சி, உள்நாட்டு மக்களின் உணவுப் பொருள் நிலைமை, மக்கள் தேவைகள் முதலியவைபற்றி கூறிவிட்டு இலங்கையும் தியாகம் செய்தே பூரண சுதந்திரத்தை பெறவேண்டுமென்றும் அத்தகைய சுதந்திரமே நிலைநிற்குமென்றும் சுதந்திரத்திற்காகப் பாடுபடும் எந்த ஆசிய நாட்டுக்கும் இந்தியா நிச்சயமாக உதவிபுரியுமென்றும் வேற்றுமை உணர்ச்சிகளை விட்டு ஒற்றுமையாக வாழவேண்டுமென்றும் கூறினர்.

ஜனாப் உபயதுல்லா பேசுகையில் மக்கள் கஷ்டப்பட்டு தியாகம் செய்து பெறும் சுதந்திரத்தையே மக்கள் காப்பாற்றிக்கொள்ள வேண்டுமென்னும் உணர்ச்சியை ஊட்டுமென்றும், அத்தகைய சுதந்திரம்தான் நிலைக்குமென்றும் இந்தியா இன்று பெற்றுள்ள சுதந்திரம் ஆசிய மக்களின் சுதந்திரமென்றும் பாகிஸ்தான் தனித்து அதிக காலம் வாழமுடியாதென்றும் அது இன்னும் மூன்று வருடகாலத்துள் இந்திய யூனியனில் சேர்ந்தேதீருமென்றும் கூறினர்.

மேலும் பலர் இக்கூட்டத்தில் பேசினர். தலைவர் முடிவுரையுடன் கூட்டம் இனிது கலைந்தது.

இந்தியா பாகிஸ்தான் பிரதிநிதிகள்

லண்டனில் பீகம் ஹுசேன்

லண்டன், நவ 19

லண்டனிலுள்ள முஸ்லிம் லீக் கூட்டத்தில், பஞ்சாப் பெண்கள் முஸ்லிம் லீக் காரியதரிசியும் ஐக்கியதேச சபையின் பாகிஸ்தான் பிரதிநிதியுமான பீகம் ஹுசைன் பேசியபோது பின்வருமாறு தெரிவித்தார்:-

காஷ்மீர் பிரச்னை அநேகமாக ஐக்கிய தேச சபையின் கவனத்திற்கு இந்தக் கூட்டத்திலேயே கொண்டுவரப்படும் பாகிஸ்தான் சர்க்கார் இவ்விஷயமாக பாகிஸ்தான் பிரதிநிதி கோஷ்டித் தலைவர் சர் முகம்மது ஜபருல்லாகானுக்கு தகவல் அனுப்பியிருக்கிறார்கள்.

பிரிட்டிஷ் கயானாவிலுள்ள ஜார்ஜ் டவுனைச் சேர்ந்த திரு ஜாஜ் பேசியபோது, பிரிட்டிஷ் கயானாவில் 30 ஆயிரம் முஸ்லிம்கள் இருப்பதாகவும், இந்தியாவிலும் பாகிஸ்தானிலுமிருந்து ஒரு லட்சம் முஸ்லிம்கள்வரை பிரிட்டிஷ் கயானாவில் வந்து குடியேறலாமென்றும் அவர்களுக்கு ஒருவருஷகாலம்வரை சம்ரட்சணை அளிக்க முடியுமென்றும். இந்தியாவிலும் பாகிஸ்தானிலுமுள்ள முஸ்லிம்கள் கஷ்ட நிவாரணத்திற்கு பிரிட்டிஷ் கயானாவில் நிதி திரட்டப் போவதாகவும் தெரிவித்தார்.

பீகம் ஹுசைன் நியூயார்க்கிலிருந்து லண்டன் வந்திருக்கிறார் நவம்பர் 22-ம் தேதி பாகிஸ்தானுக்குப் பயணமாவார்.

ஹாவனாவுக்குபாபாபயணம்

புதுடில்லி நவ 19

நவம்பர் 21-ம் தேதி ஹாவனாவில் நடைபெறும் உலக வர்த்தக மகாநாட்டில் கலந்துகொள்ள இந்திய பிரதிநிதி கோஷ்டித் தலைவரும் வர்த்தக மந்திரியுமான திரு. சி. எச். பாபா இன்று லண்டனுக்கு பிரயாணமானார்.

பாகிஸ்தான் பிரதிநிதி

நியூயார்க், நவ. 19

அமெரிக்காவிலுள்ள பாகிஸ்தான் ஸ்தானிகர், பாகிஸ்தான பிரதிநிதியாக ஹாவனாமகாநாட்டுக்கு நாளை புறப்படுகிறார்.

சர்தார் பணிக்கர்

லண்டன், நவ. 19

பிகானிரின் சமஸ்தான பிரதம மந்திரி திரு. கே. எம். பணிக்கர் ஐக்கிய தேச பொதுச்சபைக் கூட்டத்திற்கு இந்தியாவின் பிரதிநிதியாகச் சென்றுவிட்டு இங்கு வந்திருந்தவர் விமானத்தில் இன்று இந்தியாவுக்குப் பயணமானார்.

ஸ்ரீமதி விஜயலட்சுமி பண்டிட்

நியூயார்க், நவ 19

ஐக்கியதேச பொதுச்சபைக் கூட்டத்திற்கு இந்தியா பிரதிநிதி கோஷ்டித் தலைவராக வந்துள்ள ரஷியாவிலுள்ள இந்திய ஸ்தானிகர் ஸ்ரீமதி விஜயலட்சுமி பண்டிட் மாஸ்கோ திரும்புவதற்கு முன் நவம்பர் 30-ம் தேதி இந்தியாவுக்குப் பயணமாவார். அவருடன் அவரது புத்திரி ரீதாவும் செல்வார். பம்பாயில் டிசம்பர் 3-ம் தேதி போய்ச் சேர்வார். இந்தியாவில் 10 தினங்கள் தங்கியிருந்துவிட்டு மாஸ்கோவுக்குப் பயணமாவார். (ராய்ட்டர்)

எகிப்து மந்திரி சபையில் மாறுதல்கள்

கெய்ரோ, நவ 20

எகிப்து மந்திரி சபையில் மாறுதல்கள் செய்யப்பட்டன. எகிப்து பிரதம மந்திரி நோக்ராஷி பாஷா உள்நாட்டு மந்திரி பதவியோடு தனக்கிருந்த அந்நியநாட்டு மந்திரி பதவியைக் கைவிட்டு நிதி மந்திரி பதவியை ஏற்றுக்கொண்டார். விவசாய மந்திரி அகமது காவுர்தா பாஷா அந்நியநாட்டு மந்திரியானார். சமூக மந்திரி ஹசன் பாஷா அரசாங்க மந்திரியானார். நிதிமந்திரி அப்துல் பாதா பாஷாவும் பாதுகாப்பு மந்திரி மேஜர் ஜெனரல் அகமது அடடியா பாஷாவும் ராஜிநாமா செய்துவிட்டார்கள். புதிதாக நூரிஸ் பாதர்பே விவசாய மந்திரியாகவும் ஜலால் பாஹிப் பாஷா சமூக மந்திரியாகவும் மகமது அஹிதர் பாஷா பாதுகாப்பு மந்திரியாகவும் நியமிக்கப்பட்டுள்ளனர். மற்ற மந்திரி பதவிகளில் மாற்றமில்லை. (ராய்ட்டர்)

விக்டோரியா நந்தவனம்

பழைய நிலைக்கு திருத்தியமைக்கப்படும்

கொழும்பு, நவ. 21

யுத்த காலத்தில் இராணுவத்தினர் எடுத்திருந்த விக்டோரியா நந்தவனம் இப்பொழுது முனிசிபல் அதிகாரிகள் எடுத்து பழைய நிலைக்கு அதனைத் திருத்தி அமைக்க முடிவு செய்துள்ளனர். இப்பொழுது இருந்துள்ள இராணுவ கட்டிடங்கள் அழிக்கப்படுகின்றன. முனிசிபல் அதிகாரிகள் தகுந்த நடவடிக்கைகளை எடுப்பதற்கு எதிர்பார்த்திருக்கின்றனர்.

கோலாலம்பூரில் இலங்கை படையினர் நிலைமை

கொழும்பு, நவ 21

கோலாலம்பூரில் உள்ள இலங்கை ராயல் பயனியர் படை முகாமுக்கு ஒவ்வொரு ஞாயிற்றுக்கிழமையும் பௌத்த பிக்கு விஜயம் செய்து போதனை நடத்துவதாக அதன் தலைமை அதிகாரி திரு. ஈ. ஈ. வி. துரைசிங்கத்துக்கு தெரிவித்துள்ளார். திரு. துரைசிங்கத்தை முகாமுக்கு விஜயம்செய்து முகாமின் ஏற்பாடுகள் பற்றி ஆலோசனை கூறும்படி அதிகாரி கேட்டுள்ளார்.

மொத்த வியாபாரிகளுக்கோர் சந்தர்ப்பம்.

ஷாப்புச் சாமான்களில் உங்களுடைய தேவைகளுக்கு இலங்கையில் இறக்குமதியாளர்களில் முன்னணி வகிக்கும் எங்களை வினவிக்கொள்ளுங்கள். கீழ்க்கண்ட பண்டங்களில் நாங்கள் முக்கியத்துவம் பெற்றவர்கள்:-

லசிஞ்சர்ஸ், சாக்லேட்ஸ், இங்கிலீஷ் பிஸ்கட் தினுசுகள், டின்பால் உணவுகள், டின் ஆகார வகைகள், இங்கிலீஷ் மருந்துகள், டொய்லட் தயாரிப்புகள், நூல் வகைகள், சிகரெட்டுகள், இன்னும் பலவித சாமான்கள்,

கவனிப்பு:-
அயலூர் வியாபாரிகள் மாதிரிப் பட்டியல் (Pro-forma Invoices) களுக்கு விண்ணப்பித்துக்கொள்ளலாம்.

O. N. ASSEN MOHAMED & Co.,
3, Dam Street, COLOMBO.
Grams: "JUST" Phone: 4057

ஈகிள் ஹவுஸ் உயர்தர தாதுசத்துகளுள்ள பானங்களுக்குஇணையற்றது

தாதுசத்துக்கள் நிறைந்த கீழ்க்கண்ட எமது குளிர் பானங்களைக் கையிருப்பு வைத்திருக்கும்படி உங்கள் வியாபாரிகளைத் தூண்டுங்கள் :—

ஓரஞ்ச் பார்லி
லெமன் பார்லி
வைன்டோ
வைனோ
வினோ
பலதரப்பட்ட குளிர் பானங்கள்
பழ இரசங்கள்
டீ ஸைடர்
சம்பேன் ஸைடர்
ஸ்பெஷல் ஸைடர்

தந்தி:- "ஈகிள் ஹவுஸ்" நிர். 41, பார்பர் வீதி,
போன்:- 2193 கொழும்பு.

லொசிஞ்சர், டொபி, ஐசிங் சுகர்
இம்மூன்றிலும் முதன்தரமானது வேண்டுமென்றால்
குயின் (ராணி) மார்க்கே
பார்த்து வாங்குங்கள்



குயின் (ராணி) கன்பெக்ஷன் கம்பெனி
297 & 307 செ ஸ்டிரீட் (செட்டியார் தெரு)
கொழும்பு
Phone: 4511 Telegrams:- "CONFECTION"

சாம்ராஜ்யப் பாதுகாப்புக்கு இலங்கைதான் முதலாவது பலி கடா!

(1-ம் பக்கம் தொடர்ச்சி)

நிலைமை இருந்து வருகிறது. தமிழர்களோ அல்லது மற்ற சிறுபான்மை வகுப்பினரோ கம்யூனிசத்தை தழுவுவார்களேயாகில் அது அவர்களை அழித்துவிடும். கம்யூனிசம் ஒரு அரசியல் கொள்கையல்லவென்பதும் ரஷியரின் அந்நிய நாட்டுக் கொள்கைக்காக உபயோகிக்கப்படும் ஒரு கருவி என்றும் நான் கருதுகிறேன்,

இரண்டு நாடுகளின் பரஸ்பர சம்மதமிருக்கும்வரை பாதுகாப்பு ஒப்பந்தமிருந்துவரும் என்பதற்குப் பதிலாக குறிப்பிட்ட பல வருஷகால அளவிற்கு ஒப்பந்தமிருக்க வேண்டுமென்பதே எனது கருத்து. ஏனெனில் இரண்டு நாடுகளில் ஒரு நாட்டில் தீவிர அரசாங்கம் ஏற்படின் ஒப்பந்தத்திற்கு ஆட்டம் ஏற்படும். அதனால் சாம்ராஜ்யகட்டிடமே ஒரு கொடிப் பொழுதில் தகர்ந்து விடும்.

பாதுகாப்பு ஒப்பந்த சம்பந்தமாக எழுந்த கேள்விகளுக்குக் குடியேற்றநாட்டு உதவி மந்திரி டேவிட் ரீஸ் வில்லியம்ஸ் பின்வருமாறு பதிலளித்தார்:-

பிரிட்டனும் இலங்கையும் ஒரே சாம்ராஜ்யக் குடும்பத்தைச் சேர்ந்தவைகளாக இருக்கும்போது, மன ஒற்றுமைதான் அவசியமே யொழிய வேறு வழிகளால் பயனில்லை. சாம்ராஜ்யத்தின் நலன்களைப் பாதுகாக்க பிரிட்டனுக்கு எவ்வளவு அக்கறையுண்டோ அவ்வளவு அக்கறை இலங்கைக்குமுண்டு. யுத்தம் ஏற்பட்டால், சாம்ராஜ்யத்தைப் பாதுகாக்க வகுக்கும் திட்டத்தில் இலங்கைதான் முதல் ஸ்தானம் வகிக்கும் என்று நான் நிச்சயமாக கருதுகிறேன்

இரண்டாவது தடவையாக மசோதா வாசிக்கப்பட்டு நிறைவேறியது. இனி மசோதா கமிட்டியில் விவாதிக்கப்பட்டு லார்டு சபைக்குச் செல்லும்.

(ராய்ட்டர்)

மதுரை பாங்கில் ரூ. 8 லட்சத்திற்குமேல் மோசடி

4 பேர் மீது புகார் போலிஸ் விசாரணை

மதுரை, நவ. 20

உள்ளூர் போலிசாரிடம் ஹிந்துஸ்தான பாங்க் மதுரை கிளை ஏஜண்டு சென்ற 15ல் இரவு கொடுத்துள்ள ஒரு புகாரில் பாங்கியில் மொத்தம் ரூ.78,000 வரை மோசடி செய்யப்பட்டுள்ளதாயும் இதற்கு நால்வர்தான் காரணம் என்றும் குற்றம் சாட்டியுள்ளார்.

இந்த நால்வருள் முதல்மூவர் பாங்கியின் தென்னிந்திய கிளை காரியாலயங்களில் வேலை பார்த்தவர்களென்றும், கடைசியானவர், மதுரையிலுள்ள ஒரு அட்வகேட்டின் குமாரரென்றும் தெரிகிறது.

மேற்கண்ட நால்வர் மீதும் இ. பி. கோ. 409, 420 ஆகிய பிரிவுகளின்படி போலிசார் ஒரு வழக்கு பதிவுசெய்து புலன் விசாரித்து வருகின்றனர்.

தமிழ் எழுத்தாளர் ஸ்ரீ. ப. ராவுக்குபாராட்டு

பிரசுரகர்த்தர்கள் விருந்து

சென்னை, நவ. 20

எழுத்தாளர் ஸ்ரீ ப. ராமசாமி திருநெல்வேலி நகர சபைக்கு சேர்மனாக தேர்ந்தெடுக்கப்பட்டதை பாராட்டி சென்னையிலுள்ள பிரசுரகர்த்தாக்கள் உட்லண்ட்ஸில் இன்று மாலை 5 மணிக்கு ஒரு விருந்து நடத்தினார்கள். சென்னை ஷெரிப் ஸ்ரீ. ராமசாமி நாயுடு கூட்டத்துக்கு தலைமை வகித்தார். நகர பத்திரிகைக்காரர்களும், எழுத்தாளர்களும் கல்வி மந்திரி ஸ்ரீ அவினாசிலிங்கம் செட்டியாரும் வந்திருந்தார்கள். ஸ்ரீ. ப. ராவைப் பாராட்டி ஸ்ரீமான்கள் வ. ரா, ஏ. என். சிவராமன், கி. வா. ஜகன்நாதன், அண்ணாமலை, பி. ஸ்ரீ, ஜே. பி. தங்கவேல் முதலியோர் பேசினார்கள். ஸ்ரீ ப. ரா உபசாரத்துக்குப் பதிலளிக்கையில், நகர சுகாதாரத்தின் முக்கியம் பற்றி பேசினார். பின்னர் ஸ்ரீ. அ. கி. ஜயராமன் வந்தனோபசாரம் கூற கூட்டம் கலைந்தது.

தீபாவளி தினத்தில் கொலை

அசைஸ் கோர்ட்டுக்கு விசாரணை ஒத்திவைக்கப்பட்டது

யாழ்ப்பாணம் நவ 21

யாழ்ப்பாணம் வெலிங்டன் தியேட்டருக்கு முன் நடைபெற்ற கொலை சம்பந்தமாக அவ்வழக்கில் சம்பந்தப்பட்ட எதிரியை யாழ்ப்பாண மாஜிஸ்திரேட் விசாரணை செய்து முடிவில் அவரை அடுத்த வடமாகாண அசைஸ் கோர்ட்டின் போது விசாரணை செய்யப்பட வேண்டுமென்று தீர்ப்பளித்தார்

அஞ்சனாங்கான்வு என்னுமிடத்தைச் சேர்ந்த ராமன் சின்னத்துரை என்பவரை கொலை செய்ததாக சின்னட்டி ஜோஸப் என்பவர் மீது குற்றஞ் சாட்டித் தொடரப்பட்ட வழக்கில் கான்ஸ்டபிள் சின்னச்சம்பி சாட்சியமளிக்கையில் அவருடன் எதிரியை கைது செய்ததாக கான்ஸ்டபிள் அர்னோலிஸ் சாட்சியமளித்தபின் திரு ஜேகவி சின்னக்துரை சாட்சியமளித்தார். திரு. சின்னத்துரை தம்முடைய குமாஸ்தாவுடன் காரில் மணிக்கூண்டு றோட்டு வழியாக மாலை சுமார் 7-30 மணிக்குச் சென்றபோது வழியில் எதிரி காலஞ்சென்றவருடன் தியேட்டருக்குமுன் வீதியில் சண்டைபிடிக்கக்கொண்டிருந்ததைப் பார்த்ததாகவும், அவர்களை பிரிக்கும்படி சொன்னதாகவும் எதிரி காலஞ்சென்றவரின் தேகத்தில் இருந்து ஒரு கத்தியை எடுத்ததாகவும் கூறினார்.

தியேட்டர் மானேஜர் டாக்டர் திரு வி நவரத்தினராஜா சாட்சியமளிக்கையில் இச்சம்பவம் நடந்த அன்று மாலை சுமார் 5-45 மணிக்கு மூன்றாவது வகுப்பு டிக்கட் வழங்கும் பகுதியில் எதிரி குழப்பம் செய்ததாக கூறி காலஞ்சென்றவரும் வேறு ஒரு சிப்பந்தியும் எதிரியை தம்முன் கொண்டுவந்ததாகவும் தான் எதிரிக்குப் புத்திசொல்லி அவரை வெளியேற்றியதாகவும் கூறினார்

சப்-இன்ஸ்பெக்டர் திரு எடி. சொரட்ரீனோவும் சாட்சியமளித்தார். மேலும் ஒன்பது சாட்சிகள் வாக்குமூலம் அளித்தபின் யாழ்ப்பாண மாஜிஸ்திரேட் எதிரியை வட மாகாண அசைஸ் கோர்ட்டில் விசாரிக்கப்பட வேண்டுமென்று கூறி வழக்கை ஒத்திவைத்தார்.

"ஒரே உலகம்" பற்றி ஒய். எம். ஸி. ஏ. யில் பேச்சு

சமாதானம் நல்லெண்ணம் அன்பு வேண்டும்

கொழும்பு, நவ 21

கொழும்பு கோட்டையிலுள்ள ஒய். எம். ஸி. ஏ. மண்டபத்தில் நேற்று திரு. தேவர் சூரியசேனா என்பவர் 'ஒரே உலகம்' என்னும் விஷயம் பற்றி பேசுகையில், இன்று பேராசை, பொறாமை, சுய நலம் முதலியவற்றுக் கெதிராகவே போராட வேண்டுமென்றும் இன்று முதலாளிக்கும் தொழிலாளிக்குமே தான் போராட்டமென்றும் சமாதானம் நல்லெண்ணம் அன்பு ஆகியவற்றின் அடிப்படையில் வேலைசெய்ய வேண்டுமென்றும் கூறினார்.

அரசாங்க உத்தியோகஸ்தர் தொடர்ந்துபோராடவேண்டும்

லீக் கூட்டத்தில் பிரதமர் அறிக்கைக்கு கண்டனம்

பல தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன

கொழும்பு, நவ. 21

கொழும்பு பௌத்த பிரம்மஞான சபை மண்டபத்தில் பொது சேவை உத்தியோகத்தர் லீக் கூட்டமொன்று நேற்று ஆர். ஜாவா தலைமையில் நடைபெற்றது. தலைவர் பேசுகையில் சங்கங்கள் இணைக்கப்படுவதற்கு அனுமதி மறுப்பு, அனுதாப வேலைநிறுத்தங்களுக்குத் தடை, அரசியல் முன்னணி அமைப்புக்குத்தடை முதலியவை பற்றி குறிப்பிட்டுவிட்டு இன்று பிரதம மந்திரியின் நடவடிக்கைகளைச் சகித்துக் கொண்டிருந்தால் சர்க்கார் ஊழியர்கள் விரைவில் முன்னையிலும் அடிமைகளாக்கப்பட்டு விடுவார்கள் என்றும், எல்லோரும் ஒன்றாக ஐக்கியமாக தங்கள் நிலைமையை உயர்த்திக் கொள்ள உழைக்க வேண்டுமென்றும் வற்புறுத்தினார்.

திரு பி தம்பு பேசுகையில் உத்தியோகஸ்தர்கள் எல்லோரும் தங்கள் உரிமைகளைப் பெறுவதற்கு சிறந்த முறையில் அமைப்புகளை வகுத்து ஒழுங்காக கட்டுப்பாடான முறையில் நடந்து கொள்ள வேண்டுமென்று கூறினார். புதிய பொது சர்க்கார் குமாஸ்தாக்கள் சங்க அமைப்புத் திட்டங்கள் பற்றி கூட்டத்தில் விவாதிக்கப்பட்டது.

பிரதம மந்திரியின் அறிக்கையைக் கண்டித்தும் உடனடியாக தங்கள் உரிமைகள் வழங்கப்பட வேண்டுமென்றும் கூறி ஒரு தீர்மானம் இக்கூட்டத்தில் நிறைவேற்றப்பட்டது

இப்பொழுது தற்காலிக சேவையிலுள்ள அரசாங்க உத்தியோகஸ்தர்களை நிரந்தர சேவைக்கு எடுக்கும் விஷயத்தில் பட்சபாதம் காட்டப்படுகிறதென்றும் தற்காலிக குமாஸ்தாக்கள் முதலியோரை அரசாங்க நிரந்தர உத்தியோகத்துள் எடுக்கப்படும் திட்டத்தை உடனடியாக அமுலுக்குக் கொண்டுவரவேண்டுமென்றும், வேலைநிறுத்தத்தில் கலந்து கொண்டவர்கள் மீது கொண்டுவரப்பட்ட குற்றச்சாட்டுகளும் அவர்கள் மீது எடுக்கப்பட்ட நடவடிக்கைகளும் ரத்துச் செய்யப்படவேண்டுமென்றும், வேலைநிறுத்த காலத்தில் வராதிருந்ததற்கு குற்றம் விதித்தது, சம்பளம் கழித்தது முதலியனவற்றை திரும்பவும் கொடுக்க வேண்டுமென்றும், வேலைநிறுத்தத்தில் கலந்து கொண்டவர்களின் உத்தியோக இடமாற்றத்தை ரத்துச் செய்திருந்ததை உடனே வழங்கப்பட வேண்டுமென்றும், வேலைநிறுத்தத்தில் கலந்து கொண்டவர்கள் மீது கொண்டுவரப்பட்டுள்ள பாதகமான குறிப்புகளை நீக்கவேண்டுமென்றும் பல தீர்மானங்கள் இக்கூட்டத்தில் நிறைவேற்றப்பட்டன.

பாக்தாத்தில் அம்மை நோய்

பாக்தாத், நவ 20

பாக்தாத்தின் வடபகுதியில் அம்மை நோய் ஆரம்பித்து இதுவரை ஏழுபேர்களை பீடித்துள்ளது. இதன் காரணமாக இங்கு பால் கட்டுவதற்கு ஆரம்பிக்கப்பட்டிருக்கிறது.

தங்க பஸ்பம்

அமிர்தம் போன்ற ருசியும் மணமும் உள்ள சதாவரி லேகியத்தில் தங்க பஸ்பம் சேர்த்துச் சாப்பிட்டுவந்தால் இரத்த விருத்தி, சரீர புஷ்டி உண்டாகும். தேஜஸ், புத்திர சந்தானம் உண்டாக்கும். நீர்க்கோளாறுகள் சுகமாகும். நரம்புகளுக்கு பலம், வாலிபம் உண்டாகும்.

40 வேளை (20-நாள்) தங்கபஸ்பம் ரூ. 20—00
" " " சதாவரி லேகியம் ரூ. 3—00
வி. பி. செலவு ரு 2-00 (கேட்லாக் இனாம்)

தண்டபாணி வைத்தியசாலை,
பெரிய கடை வீதி, பழனி (S. India.)

ஆசிரியருக்குக் கடிதம்

ஏமாற வேண்டாம்!

ஐயா,

புலி விழுந்தது நரிக்கு இலாபம் என்பார்கள். இதேபோன்று சமீபத்தில் தோட்டத் தொழிலாளர்களாகிய எங்களின் நலனுக்காக சென்ற இருபத்தாறு வருடங்களாக உழைத்தவராகிய ஸ்ரீ கோ. நடேசய்யர் இவ்வுலகை விட்டு நீங்கியதும், அவரின் பெயரைக் கூறிக்கொண்டும், அவரின் வழித்தோன்றல்கள் என்று சொல்லிக்கொண்டும், புனிதமான இலங்கை இந்தியன் காங்கிரஸைத் தூற்றிக்கொண்டும் சிலர் எங்கள் மத்தியில் வந்து திரிகிறார்கள். இவர்களுக்குத் தொழிலாளர் மீது கிஞ்சிற்றேனும் அநுதாபமில்லை என்பது அவர்களுடன் ஒரு தரம் பேசினாலே தெரியும். இவர்களின் ஒரே நோக்கம் தோட்டத் தொழிலாளர்களை ஏமாற்றிப் பணம் பறிப்பதேயாகும். இந்த ஏமாற்ற மிரட்டல்களால் தோட்டத் தொழிலாளர்கள் ஏமாந்துவிடக் கூடாதெனக் கேட்டுக் கொள்ளுகின்றேன்.

இங்ஙனம்,
சோலைமுத்து

கண்டி. 21-11-47

இளவரசியின் புது மண வாழ்வு

கணவருடன் ரொம்ஸீ புறப்பட்டார்

லண்டன், நவ. 2

எலிஸபெத் இளவரசியும் அவரது கணவர் மவுண்ட்பேட்டன் இளவரசரும் தங்கள் புது மண உல்லாச நாட்களைக் கழிப்பதற்கு வின்செஸ்டர் ரொம்ஸீ ஆகிய இடங்களுக்கு இன்று புறப்பட்டனர். மன்னர் பிரானும் ராணியும் அவர்களை வழி அனுப்பி வைத்தனர். இளந் தம்பதிகள் புன்னகைத்துக் கொண்டும் ஆனந்த மயமாகவும் காணப்பட்டனர்

ரொம்ஸீயில் அவர்கள் இருவரும் இந்திய கவர்னர் ஜெனரல் மவுண்ட் பேட்டன் பிரபுவின் மாளிகையில் தங்கி இருப்பார்கள்.

மவுண்ட் பேட்டன் இளவரசர் அந்தஸ்து

எலிஸபெத் இளவரசி ராணியாகும்போது இளவரசர் மவுண்ட் பேட்டனின் அந்தஸ்து என்னவாகும் என்று இங்கு வினவப்படுகிறது.

பிரிட்டிஷ் அரசியல் திட்டப் பிரகாரம் ராணியின் கணவனுக்கு விசேஷ அந்தஸ்து கிடையாது. அரசரால் அல்லது ராணியால் அளிக்கப்படும் அந்தஸ்து எதுவோ, அதுவே அவருக்கு இருக்கும். [ராய்ட்டர்]

தொழிலாளர் நலன்களில் இலங்கையின் கவனக்குறை

(2-ம் பக்கத் தொடர்ச்சி)

நிலைமை இருந்துவருகிறது. அசாம் தேயிலைத் தோட்டங்களில் தோட்டத் தொழிலாளர் குடியிருக்கும் குடிசைகளுக்குள் அந்நியர் பிரவேசிக்க முடியாதென்றும் தோட்ட முதலாளிகளுக்குச் சொந்தமான ரஸ்தாக்களில் கூட அந்நியர் பிரவேசிக்கக் கூடாதென்றும் நிலைமை இருந்து வருவதாக எனக்குத் தெரிவிக்கப்பட்டது. அப்படிப் பிரவேசிப்பது அத்துமீறிய செயலாகவும், பிரவேசிப்பவர்கள் கிரிமினல் குற்றம் செய்பவர்களாகவும் கருதப்படுகிறார்கள் என்றும் தெரிவிக்கப்பட்டது. நான் தொழில மந்திரி பதவி ஏற்றதும் தொழிலாளர் பிரதிநிதிகள், தோட்ட முதலாளிகள் பிரதிநிதிகள் சர்க்கார் பிரதிநிதிகள் அடங்கிய ஒரு முக்கூட்டு மகாநாட்டைக் கூட்டி இவ்வித விசித்திர நிலைமையின் அநாகரீகத்தை தோட்ட முதலாளிகளுக்கு எடுத்துச் சொன்னேன். பழைய காலத்தில நடந்தது போல இனிமேலும் நடக்கலாகாதென்று அவர்களுக்குச் சொன்னேன். அம்மகாநாட்டில் சிறிது வெற்றி ஏற்பட்டது. நாட்டின் அரசியல் மாற்றத்தின் காரணமாக தோட்ட முதலாளிகளின் மனப்பான்மையில் மாறுதல் ஏற்படும். தோட்டங்களிலுள்ள இவ்வித அநாகரீகமான தடைகள் ஒழிந்துவிடும்.

ரூ. 453,000 மதிப்புள்ள எஸ்டேட்

சட்டப்படி சமரஸம் செய்ய வழக்கு

கொழும்பு, நவ 21

காலஞ்சென்ற ஸ்ரீமதி லேடி மா எ ஷெக்மனின் ரூபாய் 453,000 மதிப்புள்ள ஒரு எஸ்டேட் சம்பந்தமாக திரு ஜி. டப்ளியூ என். ஹெப்பொன்ஸ்டால் என்பவர் சட்டப்படி ஒப்பந்தங்கள் செய்யப்படவேண்டுமென்று கோரி ஒரு மனுவை தாக்கல் செய்திருந்தார். இது சம்பந்தமாக கொழும்பு டிக்மன்ஸ் லேனைச் சேர்ந்த ஸ்ரீமதி ரமாலின் கிளாரிஸ ஜோச் என்பவர் அடிஷனல் டிஸ்டிரிக்ட் கோர்ட்டில் அந்த மனுவை ஆட்சேபித்து அறிக்கை சமர்ப்பித்துள்ளார். இவ்வழக்கு 1948 பெப்ரவரி 26-ம் தேதி விசாரணைக்கு எடுக்கப்படும்.

பொலன்னறுவையில் குற்றங்கள் அதிகரிப்பு

போலிஸ் ஸ்டேஷன் அமைக்கப்படும்

அனுராதபுரம், நவ 21

பொலன்னறுவைப் பகுதியில் இப்பொழுது குற்றங்கள் அதிகரித்து வருவதாகக் கூறப்படுகிறது. நிலைமை நெருக்கடியைத் தவிர்ப்பதற்கு அனுராதபுரத்திலிருந்து போலிஸார் அனுப்பப்படவேண்டி வருகிறதென்று கூறப்படுகிறது. நிலைமை நெருக்கடியைப் பார்த்து இங்கு ஒரு போலிஸ்ஸ்டேஷனை அமைக்க நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன.

ஜிந்தும்பிட்டியில் இப்பொழுது
தினசரி மாலை 6 மணி, இரவு 9—30 மணிக்கு
புகழ்பெற்ற நடிகர்கள் நடிக்கும்
'விமோசனம்'
எனும் உயரிய தமிழ்ப்பேசும் படம் காண்பிக்கப்படும்

உங்களைப் பீடித்திருக்கும் கொடிய பிணிகளை
அகற்றிவிட்டீர்களா?

நோயை அறிந்து மருந்துண்டால் பிணி விரைவில் அகலுவது நிச்சயம். எனவே உங்களைப் பீடித்திருக்கும் பிணி என்னவென்று அறிந்தீர்களா? இல்லையானால் அதனை அறிய சிவானந்த சித்தர் வைத்தியசாலையின் பிரதம வைத்தியரும் நாடிப் பரீட்சை நிபுணரும் இலங்கையிலும், இந்தியாவிலும் ரோகிகளால் கைவிடப்பட்ட வியாதிகளையெல்லாம் தீர்த்து பெரும் புகழும் கீர்த்தியும் பெற்ற வைத்திய பூபதி AYUR. Dr. V. K. S. செல்லப்பாபிள்ளை M. A., M. S. (கல்கத்தா) அவர்களைக் கண்டு உங்கள் கை நாடியைப் பரீட்சியுங்கள். அவர் உங்கள் நோயை அறிந்து தகுந்த மருந்து கொடுத்து உத்தரவாதமாய்த் தீர்த்துக் கொடுப்பார். அவர் இம்மாதம் (19-ம் தேதி) தொடக்கம் எமது கிளை வைத்தியசாலை நம்பர் 23/7 ஸ்டான்லி ரோடு, (வின்ஸர் தியேட்டருக்கு அருகாமையில்) யாழ்ப்பாணத்தில் தங்கி இருந்து நோயாளருக்கு உத்தரவாத சிகிச்சை அளிப்பார். நோய் எதுவானாலும் சரி உத்தரவாதமாக தீர்த்துக் கொடுக்கப்படும். AYUR. Dr. இமானுவேல் ஜோஸப் L. A. M. S. அவர்களுடன் ஹெட் ஆபீஸ், 92, செட்டியார் தெரு, கொழும்பில் தங்கி இருப்பார். இது சமயத்தை இழந்து விடாதீர்கள்.

சிவானந்த சித்தர் வைத்தியசாலை,
92, செட்டியார் தெரு, கொழும்பு.
கிளை: 768, லோவர் வீதி, பதுளை.
23/7, ஸ்டான்லி ரோடு, யாழ்ப்பாணம்.



கிங்ஸ்லியில்
தினசரி மாலை 6 மணி, இரவு 9-30 மணிக்கும்
சனி, ஞாயிறு மெட்னி 2-30 மணிக்கும்

பார்க்கப் பார்க்க பரவசமூட்டும் பாவையர்
நடனங்கள், செவிக்கினிய கீதங்கள்,
கண்ணுக்கினிய காட்சிகள், உள்ளங்கவரும்
உயரிய நடிப்புகள் நிறைந்த

கன்னிகா

தினசரி ஆயிரக்கணக்கான மக்கள் கண்டு களிக்கும் படம்
என். எஸ். கிருஷ்ணன், டி. ஏ. மதுரம், டி. ஈ. வரதன், எம். எஸ். சரோஜினி,
எம். ஆர். சந்தானலக்ஷ்மி, காளி என். ரத்தினம் ஆகியோர் திறம்பட நடித்தது!





கிரவுன் தியேட்டர்
ஸ்கின்னர்ஸ் ரோடு-மருதானை

முதல் நம்பர் நடிகர்
எடிஜெயமான, ருக்மணி தேவி
மற்றும் பலர் நடிக்கும்

"இழந்த உறுதி"
என்னும்
சித்ரகலாவின்
வர்ணம்
தீட்டப்பட்ட
முதல்
சிங்களப்படம்
காண்பிக்கப்படும்

26-11-47
புதன்கிழமை
முதல் தினசரி
மாலை 6-1
இரவு 9-30 மணி
சனி-ஞாயிறு
மெட்னி
3 மணிக்கும்

சிலோன் நியூஸ் பேப்பர்ஸ் லிமிட்டெட்டிற்காக, 1947-ம் வருஷம் நவம்பர் மாதம் 22-ம் தேதி இப்பத்திரிகை 194 ஏ, தட்டாரத்தெரு, கொழும்பு சுதந்திரன் அச்சுக்கந்தோரில் அச்சிட்டு கொழும்பு மெயின் ஸ்டிரீட்டில் இருக்கும் சிங்காரம் நடராசா அவர்களால் வெளியிடப்படுவது